விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

NATIONAL TAMIL DAILY
மலர் 26 ஆனி 5 றம்ழா 18 இதழ் 125
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 19-6-84

## பொலிஸாரிடமிருந்து 'வோக்கி டோக்கிகள்' அபகரிப்பு! மானிப்பாயில் சம்பவம்

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் புனித அந்தோனியார் கோவில் உற்சவத்தின் போது கடமையிலீடுபட்டிருந்த போக்குவரத்துப்பொலிஸாரிடமிருந்து இரண்டு 'வோக்கி டோக்கி'களை இனந்தெரியாத இளைஞர்கள் துப்பாக்கிமுனையில்அபகரித்துச்சென்றுள்ளனர்

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை நடந்தது.

நான்கு போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தபோது காரில் வந்த சில இளைஞர்களில் ஒருவர் பொலிஸாரை சுடஎத்தனித்ததாகவும், மற்றுமொரு இளைஞர் சுடவேண்டாம் என்று சத்தமிட்டதாகவும், அந்தநேரத்தில் இரண்டு பொலிஸாரிடமிருந்து'வோக்கி டோக்கி'களை இளைஞர்கள் அபகரித்துச்சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்; ஆயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு திரண்டிருந்ததால், இளைஞர்கள் மீது பொலிஸாரினால் துப்பாக்கிப்பிரயோகம் செய்திருக்கமுடியாது போய்விட்டது என்று கூறினர்

★ இலங்கைத் தமிழர் பிரச்னையில் அரசின் அணுகுமுறைக்கு பாராட்டு

# அரசியல்தீர்வின் அவசியத்தை ஜனாதிபதிரீகன் வலியுறுத்தினர்



(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் திரு. ரெனல்ட் ரீகனுக்கும் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்குமிடையேயான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு இன்று காலை 9-00 மணிக்கு (இலங்கை நேரப்படி நேற்று இரவு 9-30) நிகழ்ந்தது.

தமிழர் பிரச்னையில் இலங்கை அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்கு பாராட்டுத்தெரிவித்த அமெரிக்க அதிபர் ரீகன், இப் பிரச்னைக்கு உடனடியாக அரசியல் தீர்வு காணப்படவேண்டியதன் அவசியத்தை இச் சந்திப்பின்போது வலியுறுத்தினர்.



ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் பாரியாரும் வெள்ளை மாளிகை போய்ச் சேர்ந்தபோது குதூகல வரவேற்பளிக்கப்பட்டது. வெள்ளை மாளிகை முன்பாக நடைபெற்ற வரவேற்பு வைபவத்தில் உரையாற்றிய இரு தலைவர்களும் வடபகுதி பயங்கரவாத சம்பவங்கள் பற்றிக் குறிப்பிட்டு கண்டனமும் தெரிவித்தனர்.

சர்வதேச பயங்கரவாதத்தை முறியடிக்க சகல நடவடிக்கைகளையும் எடுத்துவரும் அமெரிக்கா இலங்கையில் பயங்கரவாதத்தை முறியடிக்க தன்னாலானதைச் செய்யும் என்று திரு. ரீகன் தெரிவித்தார்.

### குதூகல வரவேற்பு

நேற்று முன்தினம் வாஷிங்டன் வந்துசேர்ந்த இலங்கை ஜனாதிபதி, இலங்கை நேரப்படி நேற்றிரவு 9-30 மணிக்கு வெள்ளைமாளிகை முன்றலை வந்தடைந்தார். வெள்ளை மாளிகையின் முற்பகுதி அமெரிக்க, இலங்கை தேசிய கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது இலங்கை ஜனாதிபதியும் அவரது பாரியாரும் அங்கு வந்து சேர்ந்தபோது அதிபர் ரீகனும் திருமதிரீகனும் அவர்களை வரவேற்றனர். உப ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ், வெளிநாட்டமைச்சர் ஜோர்ஜ் சுல்ஸ் ஆகியோரும் இந்த வரவேற்பில் கலந்து கொண்டனர்.

### ஜனாதிபதி ரீகன் உரை

21 பீரங்கிகள் வெடிக்கப்பட்ட பின்னர் அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது. இதன்பின்னர் அங்கு அமைக்கப்பட்டிருந்த விசேட மேடையில் அமெரிக்க அதிபர் ரீகன், இலங்கை ஜனாதிபதியை வரவேற்று உரையாற்றினர்.

''சர்வதேசபயங்கரவாதத்தை முறியடிக்க முன்னின்றுழைத்து வரும் அமெரிக்கா இலங்கையில் பயங்கரவாதத்தை முறியடிக்கவேண்டிய அனைத்தையும் செய்யும்'' என்று திரு. ரீகன் கூறினர்.

### ஜே. ஆர். உரை

இலங்கை ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன, தமக்கு அழைப்பு விடுத்தமைக்காக அமெரிக்க ஜனபதிக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினர். வடபகுதி பயங்கரவாத இயக்கங்கள் பற்றி

(8ம் பக்கம் பார்க்க)

## "இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவை அமைக்க மட்டுமே அமெரிக்கா உதவியது"

(வாஷிங்டன்)

இலங்கையில் இஸ்ரேல்நலன் காக்கும் பிரிவை அமைப்பதற்கு மட்டுமே அமெரிக்கா ஒத்தாசை வழங்கியது என்று அமெரிக்கா வெள்ளைமாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபருக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையே நடக்கவிருந்த பேச்சுவார்த்தைபற்றி விளக்கிக் கூறுகையிலேயே இந்த அதிகாரி இவ்வாறு தெரிவித்தார்.

இரு நாட்டு தலைவர்களுக்குமிடையே நேற்று பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்னர், இப் பேச்சுவார்த்தைகளில் ஆராயப்படவுள்ளவிடயங்கள் குறித்து இந்த அதிகாரி விளக்கமளித்தார்.

இலங்கையில் பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கு அரசுக்கு ஆலோசனைவழங்க இஸ்ரேலின் நலன்காக்கும் பிரிவை அமைக்க அரசுஎடுத்த முடிவுக்கு தமிழ் மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துவரும் இவ்வேளையில் இப்பிரச்னைக்கு அரசியல்தீர்வு காண்பது அவ

(8ம் பக்கம் பார்க்க)

## சென்னையிலிருந்து புறப்பட்ட கப்பல் எங்கே?

[கொழும்பு]

பம்பாய் வெங்காயத்துடன் சென்னையிலிருந்து புறப்பட்ட கப்பல் ஒன்று பத்து நாட்களாகியும் கொழும்பு துறைமுகத்தை வந்து சேரவில்லையாம்.

கடந்த 13ம் திகதி இங்கு வந்துசேரவேண்டிய இந்தக் கப்பல் காலநிலைசீர்கேடுகாரணமாக அடித்துச்செல்லப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இதேவேளை மூன்று கப்பல்கள் பம்பாய் வெங்காயத்துடன் விரைவில் இங்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

# சீதனக் கொடுமை மூவரைப் பலிகொண்டது!

## வட்டுக்கோட்டையில் பரிதாப சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சீதனக் கொடுமையால் விரக்தியுற்ற இளம்பெண் ஒருவர் தனது இரு பெண் பிள்ளைகளுடன் கிணற்றுள் குதித்து உயிரை மாய்த்துக்கொண்டார்.

இப்பரிதாபகரமான சம்பவம் வட்டுக்கோட்டை செம்பாட்டான் தோட்டம் என்னும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

பாலுசாமி அற்புதமலர் [34 வயது], அருஞ்சலா ]10 வயது], மதனு [ஒன்றரை வயது] ஆகியோரே மரணமானவர்களாவர். இவர்களின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளன.

பாலுசாமி என்பவர் தனது மனைவி அற்புதமலரிடம் சீதனமாகத் தருவதாககூறிய காணியைபெற்றோரிடமிருந்து எழுதி வாங்கும்படி அடிக்கடி வற்புறுத்தி வந்ததாகவும் கணவனின் வற்புறுத்தலின்பேரில் தனது சகோதரரிடம் சென்று கேட்டபோது சகோதரர் அதற்கு மறுத்ததும் விரக்தியடைந்த அப்பெண் கடந்த 16ம் திகதி இரவு தனது இரு பெண் பிள்ளைகளுடன் வீட்டைவிட்டுப் புறப்பட்டுச் சென்றுவிட்டாராம். அடுத்த நாள்காலை அடுத்தவளவுக்குள் இருக்கும் பாவிக்கப்படாத கிணற்றுள் அவரின் சடலங்க

(8-ம் பக்கம் பார்க்க)

## வண. சிங்கராயர் மீண்டும் மட்டக்களப்பு சிறையில்

(மட்டக்களப்பு)

கொழும்பு மேல்நீதிமன்றத்தில் கடந்தவாரம் ஆஜர்செய்யப்பட்ட வண. சிங்கராயர் நேற்றுமீண்டும்மட்டக்களப்புச் சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டார்.

கொழும்புமேல் நீதிமன்ற நீதிபதி திரு. கே. விக்னராஜா வண. சிங்கராயரை மறுவிசாரணைக்கு அழைக்கும்வரை மீண்டும் மட்டக்களப்பு சிறையிலேயே வைத்திருக்கும்படி உத்தரவிட்டிருந்தார்.

வண. சிங்கராயர் நேற்று பி. ப. 3-30 மணிக்கு கொழும்பிலிருந்து விசேட விமானப் படை விமானத்தில் மட்டக்களப்பு கொண்டுவரப்பட்டார். விமான நிலையத்திலிருந்து அவர் விசேட பொலிஸ் பாதுகாப்புடன் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு கூட்டிச் செல்லப்பட்டார். (கி)

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், நான்கு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முதல் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம், கலைப்பீடம், நுண்கலைப்பிரிவு, விஞ்ஞானபீடம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களே நேற்றுக்காலை கூடி பகிஷ்கரிப்பில், இறங்கியுள்ளனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக் ,

பருத்தித்துறை வீதி சிறுப்பிட்டியில் (கிருஷ்ணு மில்லிற்கு அருகாமையில்) 7பரப்பு தென்னம் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- வை. பொன்னம்பலம் ஆசிரியர், சிறுப்பிட்டி. 256

ஸ்ரான்லி வீதியில் இலங்கை வங்கிக்கருகாமையில் இரண்டு கடை கட்டக் கூடிய காணித் துண்டுகள் உடன் விற்பனைக்கு உள்ளது. டியூட்டரி, தொழிற்சாலை, கராச், ஸ்ரோர் என்பவற்றுக்கு உகந்தது (50 அடி × 25 அடி) தொடர்பு சிவரத்தினம், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 335

நந்தாவில் தோட்டக் காணிகள் விற்பனைக்குண்டு உடன் தொடர்பு கொள்ளவும். அ. தங்கராசா சம்பியன் ஒழுங்கை கொக்குவில். 342

வீடு கட்டக் கூடிய ஒரு (1) பரப்புக் காணி வண்ணர் பண்ணை, மூத்த விநயகர் லேனில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- அன்பு பிரிண்டர்ஸ், 248/5, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் 341

யாழ்ப்பாணம் கந்தர்மடம் அம்மன் வீதியில் மூன்று பரப்பு வெற்றுக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு த.வடிவநாதன், 20 அம்மன் ரோட், கந்தர்மடம் யாழ்ப்பாணம். 262

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 20'' Sony (கலர்) T, V. K. V-2022 A N வயர்லெஸ் ரிமோட் கொன்ரோல் விற்பனைக்குண்டு. தொடர்பு: 131, அரசடி ரோட், கந்தர்மடம் (சந்தி). 350

செற்ரு பாம் 1 நாள் பேட்டுக் குஞ்சு (B300, B380)களும் ரோஸ் புரொயிலர் குஞ்சும் சாவற்குஞ்சும் 19-6-84இல் விநியோகிக்கப்படும். விபரங்களுக்கு: R. S. K. Industry, ஆர். எஸ். கிருஷ்ணமோகன், முருகபதி, (டச்சு ரோட்), உடுவில். 320

## வகுப்பு

விஞ்ஞான முறையில் சட்டை வெட்டித் தைத்தல், கேக்ஐசிங், சிற்றுண்டிவகைகள் தயாரித்தல், Hair Styles, பூக்கள் தயாரித்தல் ஆகியவற்றிற்கு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. சேர விரும்புவோர் ஞாயிற்றுக்கிழமைகளில் 2 மணிக்கிடையில் தொடர்பு கொள்க. 'The Ladies Academy' இல. 27/3-வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, (சாமி அன் கோ அருகாமையில் உள்ள ஒழுங்கை முடிவிலுள்ளது) யாழ்ப்பாணம். 337

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## ஓய்வுபெற்ற அதிபர்களுக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்) நல்லூர் கல்விவட்டாரத்தில் 1983ம் ஆண்டில் ஓய்வு பெற்ற அதிபர்கள் திரு. த. இராசேந்திரம் - நல்லூர் ஸ்தான சி. சி பாடசாலை, திரு க. சின்னையா அரியாலை ஸ்ரீ பார்வதிவித்தியாசாலை. திரு. க. திருநாவுக்கரசு கோண்டாவில் ஸ்ரீ ராமகிருஷ்ண ம.வி, திரு. செல்லத்துரை திருநெல்வேலி இந்துத்தமிழ் க. பாடசாலை ஆகியோரின் சேவைகளைக் கௌரவிக்குமுகமாக, நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி தலைமையில்பாராட்டு விழா வைபவம் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை
மாவட்ட நீதிமன்றம்

காரைநகர் களபூமி கந்தையா கனகரத்தினத்தின் மரணசாதன விடயத்தில்

காலஞ்சென்றவர்

வழ. இல. ரி/88

கனகரத்தினம் அருளேந்திரன், பிள்ளையார் கோவிலடி, களபூமி, காரைநகர்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன நியாயாதிக்க வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு வைகாசி மாதம் 16-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1984-ம் ஆண்டு பங்குனி மாதம் 21-ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி
அ. நடராசா
(ஒப்பம்)
பதிவாளர்

வரைதல்:
செ. மகேசன்
(ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி

16-5-84 காரணங்காட்டுந் திகதி 4-7-84-க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

அ. நடராசா
(ஒப்பம்)
348 பதிவாளர்

## தேவை

வியாபாரம் செய்ய அச்சுவேலியில்
பிரதான வீதி முகப்புடன்
இரண்டு பரப்பு வெறும் காணி
குத்தகைக்கு அல்லது விலைக்குத் தேவை.

தொடர்பு:-
Jaffna Property Trades Ltd.,
3, நவீன சந்தை (மேல் மாடி), யாழ்ப்பாணம்.
போன்: 23698

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,

**கொழும்பு ஸ்ரூடியோ**

## இறீன் பீல்ட் ரவல் ஒப்பறேற்றர்ஸ்

26, நவீன சந்தை, [மேல்மாடி] யாழ்ப்பாணம்.
[மேல்மாடி மக்கள் வங்கிக்கு எதிராக]

## சர்வதேச/உள்ளூர் ரெலெக்ஸ் சேவையும் தொலைபேசித் தொடர்பும்

1. நொடிப் பொழுதில் உங்கள் அலுவலகத்திலோ அல்லது வீட்டிலோ உள்ள தொலைபேசியில் இருந்துகொண்டே சர்வதேச / உள்ளூர் தொடர்புகளை உடன் ஏற்படுத்திக்கொள்ள எம்மை அழையுங்கள்.
2. எமது நிறுவனத்தில் இருந்தவாறே உங்கள் அழைப்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பும் உங்களுக்கு உண்டு.
3. துரித தொலைத் தொடர்புகளுக்கும், நல்லுபசாரத்திற்கும் உறுதி அளிக்கும் எம்மை உங்கள் வருகை உற்சாகமூட்டுவதாகும்.
4. ஏற்றுமதியாளர்களுக்கும், இறக்குமதியாளர்களுக்கும், வியாபாரத் தொடர்புகளுக்கும் எங்கள் ரெலெக்ஸ் நம்பரை வெளிநாடுகளுக்கோ, உள்நாடுகளுக்கோ, தங்கள் கடித முகப்புகளில் [Letter pad] குறித்து, ரெலெக்ஸ் செய்திகளை அனுப்பவும் மீளப்பெறவும் நாங்கள் அனுமதியளிக்கின்றோம்.

TELEPHONE No:- 22784, 23875. TELEX No:- 22287

கீழ்வரும் வகுப்புக்கள் 23 - 06 - 84 அன்று ஆரம்பமாகின்றன

I. D. P. M. PART 1
(கொழும்பிலுள்ள முன்னணி விரிவுரையாளர்களால் நடாத்தப்படும்) (Rs. 150/-)

I. A. B. Foundation Inter and Final

Computer Programming - BASIC LANGUAGE

மேலதிக விபரங்களுக்கு:
COMTECK COMPUTER INSTITUTE
14. ST. PETERS LANE
(ஆஸ்பத்திரிவீதி - அடைக்கலமாதா கோவிலுக்கு அருகில்)
JAFFNA. T. PHONE 24355

## முதலாண்டு நினைவஞ்சலி




மலர்வு: 5-05-1958
உதிர்வு: 30-06-83
திதி: 19 06 84

அமரர் திருமதி சாந்தினி தர்மகுலசிங்கம்
(ஓட்டுசுட்டான் லக்சுமி ரேடிங் சென்ரர் உரிமையாளரின் மனைவி)

அன்பு, பண்பு, அடக்கம், ஈதல், விருந்தோம்பல் என்ற ஐவகை இன்தமிழ் சொற்களுக்கும் ஏற்ப இல்லற வாழ்க்கையில் ஒளித் தீபம் ஏற்றி வாழ்வாங்கு வாழ்ந்த அன்பு சாந்தியே! தாங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓர் ஆண்டு என்ன ஒரு நூறு ஆண்டுகள் சென்றாலும் எமது மனதைவிட்டு அகலாது அம்மா. சாந்தி என்ற பெயருக்கு ஏற்ப தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

பழைய மாளிகை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
கணவன், உற்றார், உறவினர்கள்.
(345)

## 5-வது ஆண்டு நினைவஞ்சலி



கதிரவேற்பிள்ளை சதாசிவம்பிள்ளை
(சிவசம்பு)

தோற்றம்: 27 - 02 - 1903
மறைவு: 19 - 6 - 1979
திதி: 8 - 7 - 84

எமது இல்லத்தின் சுடர்தீபமாக ஒளிவீசிய அன்புத் தெய்வமே! உங்கள் நினைவுகள் எங்களைப் புனிதமாக வைத்திருக்கின்றன. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஆடியம்பிட்டி ஒழுங்கை, சாவகச்சேரி. '351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டினை பாதுகாக்க சீக்கியர் முன்வரவேண்டும்!’

## இந்திய ஜனாதிபதி வானொலிமூலம் கோரிக்கை

புதுடில்லி, ஜூன். 18

“அன்பு, கருணை, காருண்யம், சர்வதேச தோழமை ஆகிய நெறிகளைப் போதிக்கும் சீக்கியத் தலங்கள் (குருத்துவாரக்கள்) கொலை, கொள்ளை போன்ற பாதகச் செயல்களில் ஈடுபடுவோரைப் பாதுகாக்கும் குகைகளாக மாறிவிட்டன” என்று இந்திய ஜனாதிபதி திரு. ஜானி ஸெயில்சிங் கவலை தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் வானொலியில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் போது இந்தக் கவலையை வெளியிட்டுள்ளார்.

அவர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: “பொற்கோவிலில்மறைந்திருந்த சீக்கியதீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினரின் கோரிக்கையை ஏற்று அவர்களிடம் சரணடைந்திருந்தால் இராணுவம் பொற்கோவிலில் புகுந்திருக்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்கமாட்டாது. ஆனல் அவர்களின் செயல்கள்எல்லையற்றுப்போனதைத் தொடர்ந்தே இராணுவம் அங்கு நுழைய வேண்டிய அவசியமேற்பட்டது.

“பஞ்சாப்பில் சீக்கிய தலங்கள் வன்செயல்காரர்களின் முயற்சிக்கு பயன்படுத்தப்பட்டன. அவர்கள் தமது முயற்சிக்கு தடையாகவிருந்தஇந்து, சீக்கிய சமூகத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரைக் கொன்று குவித்தனர். சீக்கியரின் பண்டைப்பெருமைக்கும், இந்திய தேசியத்துக்கு அவர்கள் ஆற்றிய தியாகத்துக்கும் களங்கம் விளைவிக்கும் வகையிலும் தீவிரவாதிகளின் செயல்கள் அமைந்திருந்தன”.

“‘இந்தியா இங்கு வசிக்கும் சகலசமயத்தினருக்கும் பொதுவான நாடு. இந்தியாவின் ஒவ்வொரு அங்குல நிலமும் இங்கு வசிக்கும் இந்து, சீக்கிய, பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் சமூக மக்களுக்குச் சொந்தமானது. இந்த தேசத்தினைப்பாதுகாக்கவேண்டியது சகலமக்களினதும் கடமையாகும்.”

“‘பொற்கோவில் இராணுவ முற்றுகை இடம்பெற்ற போதும், கோவிலின் முக்கிய கருவூலங்கள் பாதிக்கப்படாதது குறித்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன். பஞ்சாப்பில் இத்தகையதொரு சம்பவம் இனிமேலும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது சீக்கியமக்களின் கடமையாகும். சீக்கிய மக்கள் இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டை பாதுகாக்க முன்வரவேண்டும்” என்றும் அவர் தமது பேச்சில்குறிப்பிட்டார். (சூ)

## இராமர் கால்வாய்

(லக்ஞ)

இராமர் பிறந்த இடமெனக் கருதப்படும் அயோத்தியில் 1 கோடி 34 லட்சம் ரூபா செலவில் இராமர் கால்வாய் ஒன்றினை உத்திரப் பிரதேச அரசு அமைக்கவுள்ளது.

இந்த கால்வாய் அமைப்பதற்கான திட்டம் இரண்டு ஆண்டுகளில் பூர்த்தி செய்யப் படவுள்ளது.

## சிறந்த தலைவர்களாக றீகன், இந்திரா தெரிவு!

லண்டன், ஜூன் 18

பிரிட்டிஷ் மக்கள்உலகத்தின் முதலாவது சிறந்த தலைவராக அமெரிக்கஜனாதிபதி றெனால்ட் றீகனையும், இரண்டாவது சிறந்த தலைவராக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியையும் தெரிவுசெய்துள்ளனர்.

பிரிட்டிஷ் ‘சன்டே டைம்ஸ்’ பத்திரிகை பிரிட்டிஷ் மக்களிடம் நடத்திய வாக்குக்கணிப்பீட்டில் இது தெரியவந்துள்ளது.

பஞ்சாப் பொற்கோவிலில் இந்திய இராணுவத்தை அனுப்பிய 10 தினங்களின் பின்னரே இந்த பத்திரிகை கணிப்பீடு நடைபெற்றுள்ளது.

பிரிட்டிஷ் மக்களின் இந்தத் தீர்ப்பு பஞ்சாப் விவகாரங்களினல் இந்தியப் பிரதமரின் செல்வாக்கு எந்தவகையிலும் குறைந்துவிடவில்லை என்பதனை எடுத்துக்காட்டுகிறது என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்கள். [சூ]

## பஞ்சாப் தீவிரவாதிகளுக்கு வெளிநாட்டு ஆயுதங்கள்!

### ஆப்கான் அரசு அறிவிப்பு

காபூல், ஜூன். 18

“பஞ்சாப்பில் இடம்பெற்ற தீவிரவாதிகளின் வன்செயல்களில் வெளிநாட்டு அரசாங்கங்களுக்கும் தொடர்பு இருக்கிறது” என்று ஆப்கானிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் வானொலியில் இந்தச்செய்தி ஒலிபரப்பப்பட்டது.

ஆப்கானிஸ்தான் கிளர்ச்சிப் படைகளுக்கும், பஞ்சாப்தீவிரவாதிகளுக்கும் ஒரேரகமான ஆயுதங்களே வழங்கப்பட்டுள்ளன இதிலிருந்து ஆப்கான் கிளர்ச்சிப் பிரிவினருக்கு ஆயுதங்களை வழங்கும் நாடுகளே பஞ்சாப் தீவிரவாதிகளுக்கும் ஆயுதங்களை வழங்கியிருப்பது நிருபணமாகியுள்ளது.

இந்தியாவினைத் துண்டாட முயலும் சில வெளிநாட்டுச் சக்திகளே இந்த ஆயுதங்களைப் பஞ்சாப் தீவிரவாதிகளுக்கு வழங்கியுள்ளதாகவும் ஆப்கான் வானொலி அறிவித்துள்ளது. [சூ]

## இஸ்ரேலுக்கான அமெரிக்க உதவிகள் அதிகரிக்கும்!

நியுயோர்க், ஜூன் 18

அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஏராளமான நிதிஉதவிஅளித்து வருகின்றது. இந்த ஆண்டு அமெரிக்கா இஸ்ரேலுக்கு அளிக்கும் நிதிஉதவி 270 கோடி டாலராகும். அடுத்த ஆண்டு இது 225 கோடி டாலராக இருக்கும்; இதில் 60 சதவிகிதம் இஸ்ரேலிய இராணுவ செலவுக்குப்போய்விடும். ஆனல் 1985ல் 270 கோடி டாலர் மீண்டும் தனக்குக்கிடைக்கும் என்று இஸ்ரேல் நம்புகிறது.

அமெரிக்க-இஸ்ரேலிய உறவில் முதல் தடவையாக இது கடனாக அளிக்கப்படாமல், திரும்பக் கொடுக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையற்ற உதவியாகவே அளிக்கப்படுகிறது.

எனினும் அமெரிக்கக் காங்கிரஸ், இஸ்ரேல் 300 கோடி டாலரை அமெரிக்காவிடமிருந்து பெற்றுக்கொண்டு இன்னும் அது செலவிடப்படவில்லை என்பதைக் கண்டுபிடித்துள்ளது. அமெரிக்காவிடமிருந்து எவ்-16 ரக போர் விமானங்களை வாங்குவதற்காக அளிக்கப்பட்ட பணம் இது. இருப்பினும் றீகன் நிர்வாகம் மேலும் இஸ்ரேலுக்கு பணத்தை அள்ளிக்கொட்டத் தயாராக உள்ளது.

இந்த தாராள மனப்பான்மைக்கான காரணம் அமெரிக்கப் பொருளாதார விவகாரங்களுக்கான துணைக் காரியதரிசி வில்லியம் ஷினைடரின் அறிக்கையில் உள்ளது என்று கூறுகிறது. டேனிஷ் பத்திரிகை இஸ்ரேலை அமெரிக்காவின் இராணுவக் கூட்டாளி என்று நாங்கள் கருதுகிறோம் என்றார் அந்த அமெரிக்க அதிகாரி.

முக்கியமான விஷயம் என்னவென்றல் தென்லெபனானை ஆக்கிரமித்துப் பிடித்துவைத்திருக்கும் இஸ்ரேலுக்கு, நாளொன்றுக்கு பத்து லட்சம் டாலர் செலவாகிறது. இங்கேதான் அமெரிக்க - இஸ்ரேலிய ராணுவ ஒத்துழைப்பின் முக்கியத்துவம் அடங்கியுள்ளது.

## பங்களாதேஷில் 50,000 பேர் வீடிழந்தனர்

டாக்கா, ஜூன் 18

பங்களாதேஷின் தெற்கு மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினல் சுமார் 50,000 மக்கள் தமது வீடுகளை இழந்துள்ளார்கள்.

பங்களாதேஷின் தெற்குப் பகுதியிலுள்ள 3 மாவட்டங்களில் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கினல் தற்போது அங்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

அண்மையில் இப்பகுதியில் இடம்பெற்ற வெள்ளவிபத்தில் 79 பேர் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்திய மாநிலமான மேற்குவங்காளத்திலும் ஆறுகள் உடைப்பெடுத்தமையைத் தொடர்ந்து வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. (சூ)

## இன்றிரவு வானொலியில்

[யாழ்ப்பாணம்]

சரித்திரப்பிரசித்தி பெற்ற திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில் பற்றிய சிறப்பு வரலாற்று நிகழ்ச்சியொன்று இலங்கை வானொலி தமிழ்ச்சேவை ஒன்றில் இன்று 19ம்திகதி செவ்வாய்க்கிழமை இரவு 6.35 மணிமுதல் 7.05 வரைஒலிபரப்பாகும். இச்சித்திரத்தை திரு. எஸ். திருச்செல்வம் வானொலிக்காக எழுதியுள்ளார்.

## சருமநோய் சிகிச்சை ஆரம்பிக்க கோரிக்கை

(மாவிட்டபுரம்)

“தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் முறிவு தறிவு சிகிச்சை, சருமநோய் சிகிச்சை ஆகியன ஆரம்பிக்கப்படாமலிருப்பது பெரும் குறையாக உள்ளது. இந்த இரு சிகிச்சைகளையும் இங்கு ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப் படவேண்டும்.”

இவ்வாறு தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கூட்டமொன்றில் பேசிய குழந்தை வைத்திய நிபுணர் திரு. எம். பத்மநாதன் கோரிக்கை விடுத்தார்.

இவ்வைபவத்தில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட சுகாதார சேவை கண்காணிப்பாளர் திரு, மாணிக்கம் இது குறித்து தாம் ஆவனசெய்வதாகத் தெரிவித்தார்.

## நிலத்துக்கு அடியிலான பிரான்ஸின் அணுக்குண்டு பரிசோதனை!

### பசுபிக் பிராந்தியத்தில் நடத்தப்பட்டது

பாரிஸ், ஜூன், 18

பிரான்ஸ் பசுபிக் பிராந்தியத்திலுள்ள தனது தீவொன்றில் வைத்து நிலத்துக்கடியிலான அணுக்குண்டு பரிசோதனையை நடத்தியுள்ளது.

இது பிரான்ஸ் இந்த ஆண்டில் நடத்திய 4வது அணுக்குண்டு பரிசோதனையாகும்.

35கிலோ எடையுள்ள இந்த அணுக்குண்டுவெடிப்பின் தாக்கங்களை நியூஸிலாந்திலுள்ள பூமி அதிர்வு அவதானநிலையம் பதிவு செய்துள்ளதாக நியூஸிலாந்து பூமி அதிர்வு அவதான நிலைய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தப் பிராந்தியங்களில் பிரான்ஸ் நடத்திவரும் நிலத்துக்கு அடியிலான பரிசோதனையைஅவுஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற நாடுகள் பெருமளவில் கண்டித்து வந்துள்ளன. இப்பிராந்தியத்தில் அணுப்பரிசோதனையை நிறுத்துமாறு அவுஸ்திரேலியா பிரான்ஸிடம் கோரிக்கையும் விடுத்துள்ளது.

ஆனலும் பிரான்ஸ் இப்பிராந்தியத்தில் தொடர்ந்து நிலத்துக்கு அடியிலான அணுப் பரிசோதனையை நடத்திவருகிறது.

பிரான்ஸ் நிலத்துக்கடியிலான தனது அணுப்பரிசோதனையை 1975ம் ஆண்டு தொடங்கியதிலிருந்து இன்று வரை 62தடவைகள் நிலத்துக்கடியிலான அணுப்பரிசோதனையை நடாத்தியுள்ளது. (சூ)

## வீட்டுத்தோட்டப் போட்டி

(வவனியா)

வவனியா தெற்கு தமிழ்ப் பிரிவிலுள்ள வீட்டுத் திட்டங்களுக்கிடையிலான வீட்டுத் தோட்டப் போட்டி ஒன்றினை வவனியா மாவட்ட சர்வோதய நிலையத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்,

இப்போட்டிகள் தொடர்பான

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

ஆத்திரம் கொண்டவனை அன்பால் வெல்வாய்
தீயவனை நன்மைகாட்டி வெல்வாய்
பேராசை கொண்டவனைத் தயாளத்தால் வெல்வாய்
பொய்யனைச் சத்தியத்தால் வெல்வாய்.

—புத்தர்

# நமது நோக்கு

## அடுத்த ஆடியும் அணுகுகிறது

எங்கள் சனிக்கிழமை (16-6-84) பத்திரிகையில் 'குற்றமும் தண்டனையும்' என்ற தலைப்பில் திரு. எம். பெரேரா என்னும் சிங்களப் பெருமகன் எழுதிய கட்டுரையைப் படித்தவர்கள் பெரும் ஆறுதலடைவார்கள்.

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கட்டுரையை 'டெய்லி நியூஸ்' பத்திரிகையிலிருந்தெடுத்து தமிழில் மொழிபெயர்த்துப் பிரசுரித்தமை எங்கள் வாசகர்களுக்கு ஒரு வரப்பிரசாதமென நினைத்தோம்.

அரசாங்க பத்திரிகைக்கு இத்தகைய பண்புள்ள மனிதர்கள் நியாயம் கோரி எழுதுவது, அரசாங்கத்துக்கு மாறானதென்றால். அது பொதுவாகப் பிரசுரிக்கப்படுவதில்லை.

எனவே திரு. எம். பெரேரா காலம் தாழ்த்தியாவது நாட்டில் சட்ட ஆட்சி நிலைகுலைந்திருப்பதை நன்றாகக் கண்டித்திருப்பது எங்கள் வாசகர்களின் சில தவறான எண்ணங்களை நீக்கிவிட உதவும்.

திரு. பெரேரா முக்கியமாகக் குறிப்பிட்டவை; நீதிபதிகள் வீட்டிற்கு முன் நடந்த அசம்பாவிதங்கள், ஆடிக்கலவரம், அப்பாவிச் சிறுவன் கடத்தப்பட்டு கொல்லப்பட்டது, நாட்டில் அதிகரித்துவரும் கொலை, கொள்ளை, கற்பழித்தல், கடத்தல், தீவைத்தல் போன்ற அக்கிரமங்கள்.

குறிப்பாக அவர்சாடுவது ஆடிக்கலவரத்தையே! பௌத்த சமுதாயமென்ற பெருமையுடையவர்கள் இதனை எவ்வாறு பார்த்துக் கொண்டிருந்தோம்? என்ற சவாலைக் கேட்கும்போது இவ்வாறு சிந்தித்துக் கவலை கொண்ட சிங்களப்பெருமக்கள் பலர் நிச்சயம் இருக்கிறார்களென்பது தெளிவாகின்றது; எல்லோரும் எழுதுவதில்லை.

அதே சமயம் சம்பவம் நடந்து ஒருவருடமாகிறது. இதற்குப் பொறுப்பானவர்கள் யார்? இதற்குரிய தண்டனைகளில் தூக்கும் ஒன்றாயிருப்பதால் அது அவ்வாறு நடைபெறுமா? என்ற சந்தேகத்தை திரு. பெரேரா திடமாக எழுப்பியிருக்கிறார்.

ஆடிக்கலவரம் திட்டமிடப்பட்டு திறமையாக நிறைவேற்றப்பட்டதென்று அதற்குப் பொறுப்பானவர் நினைக்கலாம்; ஆனால் பண்பட்ட சிங்களச் சமூகத்திலும், வெளிநாடுகளிலும் இது ஏற்படுத்திய, இன்றும் ஏற்படுத்திவரும் துன்பத்தையும் துயரையும் அரசாங்கம் நன்குணர்ந்திருக்கிறது. நாட்டின் கீர்த்தி பறந்துவிட்டதென்றால் அது மிகையாகாது.

ஆடிக்கலவரத்தால் உண்டான தடுமாற்றமே இன்று நாட்டின் தலைவர்களென்று தம்மை நினைப்பவர் பலர் கக்கிவரும் நஞ்சில் தென்படுகின்றது.

மர்மத்தில் மர்மமென்று சர்வதேச சட்ட நிபுணர் [illegible] ம் தனது அறிக்கையில் சங்க குறிப்பிட்டிருப்பது இந்தக் கொடுமையை யார் திட்டமிட்டதென்பதே!

அதற்கடுத்ததாக இதனை விசாரித்து தகுந்த நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் தயங்குவதை.

கலவரத்தின் காரணம் எதுவென்றாலும், அது நடந்தகாலத்தில் நியாயத்தைப் பேணி அதனைக் கண்டித்து அதற்குப் பலியானவர்களுக்கு ஆறுதல்கூற அரசு தவறியது. இதுஇனங்களிடம் நட்பையும் ஒற்றுமையையும் வளர்க்கும் முயற்சி நினைக்க முடியாத காரியமென்றதை வற்புறுத்துகின்றது.

இரு பக்கத்திலும் தீவிரவாதிகள் என்றால் நியாயத்தைப் பேணப் பொறுப்புடைய அரசு பின்வாங்கியது; ஒருபக்க தீவிரவாதிகளின் குரல், பெரு நெருப்புக்கு மேல் கேட்டதும் ஆறாவது திருத்தச் சட்டம் அவதரித்தது.

தனிநாடு கோரிக்கையின் வரலாறு கடந்த 28 வருடங்களாக தமிழ் மக்கள் பட்டுவந்த பாகுபாட்டின் உச்சநிலைக்கொருசின்னம்; இதனை வளர்த்தவர்கள் யாரென்பது எவருக்கும்தெரியாதா?

எனவே இந்த நிலையில் ஆறாவது திருத்தச் சட்டத்தைக்கொண்டு மக்கள்பிரதிநிதிகளை வெளியேற்றியது அவர்கள் அமைதியாக வாதாடும் உரிமையைப் பறித்ததின் விளைவு. இதனை ஒருபோதும்ஏற்றுக்கொள்ள முடியாதென்பது சர்வதேச சட்ட நிபுணரின் கருத்து.

இன்றைய குழப்ப நிலையில் அரசியல் ரீதியில் ஒரு சமாதான முடிவு ஏற்படுத்த இலங்கையின் நன்மைநாடும் நட்பு நாடுகள் உதவலாம்; உதவ முயல்கின்றன.

இந்த நாட்டுப் பிரச்னை நாட்டு மக்களின் தீர்ப்பைப் பொறுத்தது; ஆனால் மக்கள் நியாயம் காண்பதற்கு அரசியல் வாதிகளின் சிக்கல்களை அவிழ்ப்பதற்கு தொடர்புடைய நடுநிலைமைப் பாத்திரங்கள் விவேகத்துடன் நடிக்க வேண்டும்.

இன்றேல் துன்பியல் நாடகம் எவ்வாறு முடியுமென்பது எவரும் அறிந்ததே.

## மண் அரிப்பு

(ஒட்டுசுட்டான்)

முத்துஐயன் கட்டுகுளத்தில் நீர்த் தேக்கம் 20 அடி உள்ளது தற்போது வீசும் பருவப்பெயர்ச்சிக்காற்றால் ஏற்பட்டுள்ள அலைகாரணமாக நீர்தேக்க கட்டு பயங்கரமண் அரிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் அருகாமையில் குடியிருக்கும் விவசாயிகள் பீதி அடைகின்றனர். எனவே இது சம்பந்தமாக நீர்பாசன இலாகாவிடம் இம்மண் அரிப்பை தடைசெய்ய கல்அணை போட வேண்டும் என மகஜர் ஒன்று திட்டமுகாமையாளர் ஊடாக அனுப்பப்பட்டுள்ளது. அதில் உடன் நடவடிக்கை [illegible] வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது

# யாழ். பிரதேச சுற்றாடலுக்கு பல்வேறுவழிகளில் ஆபத்து!

உலகில் உயிர்களின் வாழ்க்கை சூழலிலேயே பெரிதும் தங்கியுள்ளது. இன்றைய விஞ்ஞான முன்னேற்றங்கள், சனத்தொகைப் பெருக்கம் போன்றவற்றினால் உலகெங்கணும் சூழற் சமநிலை குழப்பப்பட்டு குலைக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே.

சூழல் மாசாக்கம் எனும் விடயத்தில் யாழ். நகர் எவ்வளவு தூரம் முக்கியம் பெறுகிறது? என்பது ஆய்வுக்குரியது.

யாழ். நகர் இலங்கையில் சனத்தொகை கூடிய மாவட்டங்களில் ஒன்று. 1980-ம் ஆண்டுக் கணக்கீட்டின்படி ஏறக்குறைய எட்டரை லட்சம் சனத்தொகை கொண்டது யாழ். மாவட்டம், சூழல் பாதிப்புக்கு வேகமாக உட்பட்டு வருகிறது. இப்பாதிப்பின் விளைவுகள் இன்று இங்கு **வெளிக்காட்டப்பட்டு வருகின்றன. யாழ், நகரில் சூழல் தூய்மையை வலியுறுத்தி அதற்கு ஆவன செய்யும் நோக்கம் அறிவுலகினிடையே வளரத் தொடங்கி**யுள்ளது:

யாழ். நகரில் சூழல்மாசடையும் வழிகள் பல. இரு பெருந்தொழிற்சாலைகள் அதீத விவசாய இரசாயனப் பயன்பாடு, தொடர்ச்சியான சுண்ணக்கல் கழிவு, தொண்டைமானாறு, உப்பாறு, ஆனையிறவு போன்ற உப்போடைகள், பெருமளவு தரைகீழ் நீரிறைப்பு என்பன அவற்றின் மூலங்கள் சில.

வளிமாசடைவது ஒரு பரந்த சூழல் மாசடைவதற்கு வழிகோலுகிறது. முன்னெப்பொழுதும் இல்லாதவாறு வாகனங்களின் எண்ணிக்கை பன்மடங்காக அதிகரித்துள்ளது. மேலும் இருபெருந்தொழிற்சாலைகள் சூழல் மாசடைவதைத் தூண்டி வருகின்றன. இவை வெளிவிடும் $CO_2$, $H_2S$, $SO_2$ போன்ற வாயுக்கள் அயல்வாழ் மக்களுக்குப் பல புதுமையான நோய்களை ஏற்படுத்துகிறது. மேலும் மண்வளம் கெட்ட கனிப்பொருட்களைப் பெறமுடியாததாக்கிவிடுகிறது. காங்கேசன் சீமெந்துசாலையின் மூலம் வெளியிடப்படுகின்ற சீமெந்து நுண்டுணிக்கைகளும் கனப்பொருள் பொருள் தாழ்நிலையை அடையச் செய்து தாவரங்கள் புகையும், அயல்வாழ் மக்களை சுவாச இதய நோயாளிகளாக்கி வருகின்றன. இவைமுன்னைவிடப் பன்மடங்கு தாக்கத்தை அதிகரிக்க புற்றுநோயும் வளர்ந்து வரும் அபாயமாகக் கணிக்கப்படவேண்டியதாயுள்ளது. காங்கேசன் துறைச் சுற்று வட்டாரங்கள் புழுதி மண்டலங்களாகக் காட்சி அளிக்கின்றதெனக் கூறின் அது உங்களுக்குமிகையாகத் தோன்றுகிறதா? கண்ணில் கிணற்றுநீர் பட்டால் சிறிது எரிச்சலைத் தருகிறதென்று கூறின் அது பெரியதொரு பொய்யாகத் தோன்றுகிறதா? மிகைப்படக் கூறியதாயிருக்கலாம், ஆனால் கலப்படக் கூற்று அல்ல.

புகைபோக்கியை எவ்வளவு உயர்த்தினாலும் பிரச்னை தீரப்போவதில்லை. சீமெந்து துண்டுதுணுக்குகளை ஐதாக்கி உருமாற்றி கடத்தலாம். சிலர் இத்துணிக்கைகளை உருமாற்றி தயாரிப்பில் மீளப்பயன்படுத்தப்படலாமென்கின்றனர்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையால்வெளியிடப்படும் குளோரின் வாயு அயலிலுள்ள கமங்களில் விளைச்சலைக் குறைக்கிறது. வெளியேறும் [illegible] பற்றுநோயுடைய பல்வேறு வகை நோய்கள் ஏற்படுத்தப்படலாம். அருகில் வாழும் மக்களில் பல், என்பு அமைப்புக் குறைபாடுகள் ஏற்படுத்தப்படுகின்றன. எதிர்காலச் சந்ததியினரின் பல், என்புஅமைப்பும் பதம்பார்க்கப்படுகிறது. இதனால் ஒரு பக்கம் பொருளாதார நட்டங்களும் இன்னொரு பக்கம் உடலாதாரக்குலைவுகளும் அவர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது.

தொழிற்சாலைகள் சனநெருக்கம் குறைந்த இடங்களில் நிறுவப்படல்வேண்டும். சிலதொழிலகங்கள் தம்கழிவுகளை கடலில் கலப்பதால் கடலுயிரினச் சம

> கடந்த ஆண்டு ஜூன் சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மாவட்ட சுற்றாடல் பாதுகாப்புசபை மாணவர்களிடையேநடத்திய கட்டுரைப் போட்டியில் 3-வது பரிசு பெற்ற கட்டுரை இது,

நிலையைக் குலைக்கின்றன மீனின அழிவுக்கு அதன்மூலம் வழிவகுக்கப்படுகிறது. தொழிற்சாலைகள் உற்பத்தி, இலாபம் என்பவற்றை மட்டுமே எண்ணாது சூழலையும் மனதில்கொள்ளவேண்டும்.

### இஸ்ரேலிய விஞ்ஞானியின் எச்சரிக்கை

யாழ்ப்பாணத்தில் கிணற்றைத் தவிர வேறு எவ்வித நன்னீர் மூலாதாரங்களும் இல்லை. யாழ். மாவட்டத்தில் 66,000 வீட்டுப்பயன்பாட்டுக் கிணறுகளும் 18,000 விவசாயத் தேவைகட்கான கிணறுகளும் உட்பட 84000 கிணறுகளுள்ளன. வருடத்திற்கு 40,000 ஏக்கர்அடி நிலத்தடிநீர் உயர்த்தப்படுகிறது. இஸ்ரேலிய விஞ்ஞானியொருவர் முன் பெர்ருமுறை இதேவீதப் பயன்பாடு தொடர்ந்தும் இங்கிருப்பின் 25ஆண்டுகளில் தரைக்குக்கீழ் நன்னீர் அற்றுப்போகலாம் என்று கூறியதை நினைவுகூரவேண்டும். யாழ். நகரில் நீர் விரயம்கூட இவ்வாறு தரைக்குக்கீழ் நீர் மேலெடுக்கப்

**வி. காண்டீபன்**
[பரி, யோவான் கல்லூரி]
யாழ்ப்பாணம்

படும்போது கடல்நீர் மேலும் தரைக்குக்கீழ் நீரோடைகளை அடையும் வாய்ப்பு அதிகரிக்கப்படுகிறது. எனவே உவர்நீராக்கம்ஏற்படுகிறது. அருகிலுள்ள பயிர்செய் நிலங்களை உப்போடைகளும் உவர்நீராக்க விளைவும் பாழாக்குகிறது. இவ்வோடைகளை நன்னீர் ஓடைகளாக மாற்றும்போது தரையிற்தோன்றும் உப்புப்படிவுகளைப்பற்றிய கவனம்வேண்டும் இப்படிவுகளை இரசாயன அறிவைப் பயன்படுத்தி வாய்ப்பாக்கிக்கொள்ள முயலவேண்டும். பயன்பாட்டுக்கு உதவுமா என்பதை இரசாயனக்கைத்தொழிலறிஞர் கவனிக்கவேண்டும். விவசாயிகள் மனம்தளராது வறட்சி எதிர்ப்பு. உவர்தாங்கு பயிர்களான மிளகாய், புகையிலை, வாழை, பர்கல் போன்றவற்றைப் பயிரிடலாம். உவர்த்தன்மை பரப்பப்பட, மண்டிசேர்க்கப்படக் காரணமான ஓடைகளுக்கு ஒரு சிறந்த வடிகால் புனரமைப்பை மேற்கொள்ளவேண்டும்.

யாழ். நகர் விவசாயிகள், நவீன விவசாய விஞ்ஞான அறிவு செயன்முறை இல்லாது தம்மெண்ணப்படி விவசாய இரசாயனங்களை அதிகளவு பயன்படுத்துகின்றனர். வளமாக்கிப் பிரயோகச் சீர்கேடுகளால் பெரும்பாதிப்பு ஏற்பட்டுள்ளது. உதாரணமாக இருவாரங்கட்கு ஒருமுறை குறித்தளவு உரம் பயிருக்கு இடவேண்டுமாயின் லாபவசதி என்பவற்றைக் கருதி மாதத்திற்கு இரு மடங்கு உரமிடுவதாயின் எதிர்பார்த்த பலன் கிடையாது என்பதுடன் பெருந்தீமைகள் எழுகின்றன. அயன் செறிவதிகரிப்பால்பயிர்கள் இறக்கின்றன

### காடழிப்பின் பாதிப்பு

காடழிப்பு நாடழிப்பேயென்பதைப் பலர் உணருவதில்லை இன்றே வறட்சியில் வாழும் நாம் இனிப் பாலையிலே வாழவித்திட்டுக் கொண்டிருக்கின்றோமல்லவா? சோலைக்கு வித்திட மரவித்திடவேண்டும். இதை யாழ். நகர மக்களாகிய நாம் சிந்திக்கவேண்டும்.

காடழிப்பால் தற்போதைய ஆண்டுக்கு 50% என்ற மழைவீழ்ச்சி மேலும் குறைக்கப்படலாம். மண்ணரிப்பு, மண்வளம்குன்றல், வறட்சி என்பவற்றோடு சூரியஒளியின் நேரடித்தாக்கம் யாழ் நகரைப் பாழ்நகராகப் பாலைநிலமாக்கிவிடும். வீடு, வீதி, எங்கும் எவரும் மரம்நடவேண்டும். யாழ் நகரில் நட்டமரங்களே பராமரிப்பாளரில்லாது பட்ட மரங்களாய் காட்சி அளிக்கின்றன. நட்டுவிட்டால்போதாது பட்டுவிடாது காக்கவேண்டும். எமது 'பழம்' பெருமரங்களால் மா, பலா என்பவற்றோடு இடையில் அறிமுகமான மகோகனி அசோகமரங்களும் அண்மையில் அறிமுகமான (யூகலிப்ட்ஸ்) சஞ்சீவி மரங்களையும் காண உவகை பொங்குவதோடு எதிர்பார்ப்பும் எழுகிறது. மரநடுகை இயக்கங்கள் வலுப்பெறவேண்டுவதோடு, தனியார் தாமும் தாமாகவே இப்பணிக்குமுன்வருவாராயின் சாதனை செய்யலாம். வீட்டிலாவது மரங்களை நட்டு பேணி வளர்த்து சுயநலத்தோடு பொதுநலத்தையும் செய்யலாம்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் தேசிய விஞ்ஞானசபை சூழல் மாசடைவதை பின்வருமாறு இலக்கணப்படுத்தியுள்ளது. "எமது சூழலிலுள்ள வளி, தரை நீர் என்பவற்றின் பௌதீக இரசாயன உயிரியல் இயல்புகளை மனிதவாழ்விற்குத்தீமை விளைவிக்கும் அல்லது உயிரினங்கட்குத் தீமை விளைவிக்கும் அல்லது மனிதனை நிர்மாணிக்கும் தொழில்முறைகளைப்பாதிக்கும் அல்லது கைத்தொழில் வளங்களைச் சிதைவடையச் செய்யும் விரும்பத்தகாத மாற்றங்கள்". சுருக்கமாக இதைஇயற்கையின் வளங்களையும் வலுக்களையும் சிதைக்கும்மாற்றங்கள் என இலக்கணப்படுத்தலாம்.

யாழ். நகர மக்கள் தம்சிந்தனையாலும் உழைப்பாலும் இவ்விடயம் பற்றிய நல்லறிவுத்தெளிவாலும் மட்டுமே இப்பிரச்னை தீர்க்கக்கூடும். மற்றவரை எதிர்பாராது நாமே நம் சூழலை பாதுகாக்க முயலவேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் அகவுணர்வு பெற்றாலொழிய தீர்வுக்கு ஒரு வழிகாணமுடியாது. எனவே இத்தகு பிரச்னைகளில் பிரச்சாரம் அதிகமாக மேற்கொள்ளப்படுகிறது. மேற்கொள்ளப்படவேண்டும். மேலும் பூச்சிகொல்லிகள், கிருமிகொல்லிகள், களைகொல்லிகள் என்பன அதிகளவு பயன்படுத்தப்பட்டு ஆட்கொல்லிகளாகமாறி மனிதரில் பல விசித்திரநோய்களை ஏற்படுத்துகின்றது.

இந்நிலையில் உலக சுகாதாரத் தாபனத்தின் ஆய்வுக் கூற்றொன்றை நினைவு கூறல் சாலப்பொருத்தமானது.

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பிள்ளையின் அனுமதியுடன் பெற்றோர்கடமைமுடியகூடாது

(யாழ்ப்பாணம்)

"ஓர் பாடசாலை வளர்ச்சி பெறுவதற்கு ஆசிரியர்கள், மாணவர்கள் மட்டும் உதவ முடியாது. பாடசாலை மாணவர்களின் பெற்றோருக்கும் பாடசாலை வளர்ச்சியில் பெரும்பங்குண்டு.

எத்தனையோ சிரமத்தின் மத்தியில் தமது பிள்ளைக்கு பாடசாலையில் அனுமதிகிடைக்கிறது. பிள்ளை அனுமதிக்கப்பட்டதும் தமது பொறுப்புமுடிந்துவிட்டதாக எண்ணிவிடக்கூடாது. பிள்ளையின் வளர்ச்சியில் அக்கறைகொள்ளும் பெற்றோருக்கு பாடசாலையில்பிள்ளை அனுமதிக்கப்பட்டதும் தான் தங்களது கடமையும் தொடங்குகிறது என்ற உணர்வு ஏற்படவேண்டும்" என்று யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை அபிவிருத்திச்சபைக் கூட்டத்தில் பாடசாலை அதிபர், திரு. செ. கனகரத்தினம்தெரிவித்தார்.

பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அதிபர் தமது தலைமை உரையில் மேலும் கூறியதாவது:

"கல்வி நிர்வாகத்தில் அபிவிருத்திச் சபையின் பங்களிப்பு முக்கியமானது. இந்த வகையில். யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்களின் முயற்சிகளும் அவர்கள் பாடசாலை வளர்ச்சிக்கு வழங்கும் உதவிகளும் பாராட்டக்கூடியது. இதேபோன்று பாடசாலை வளர்ச்சிக்குப் பெற்றோர் தொடர்ந்து உதவவேண்டும்." என்றார்.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். சிவநாயகமூர்த்தி தமது உரையில்; பாடசாலையின் வளர்ச்சிபற்றிக் குறிப்பிட்டு; யாழ். மாவட்டத்தில் பாலர் பாடசாலையின் பெறுபேறுகளை மையமாக வைத்து ஆராயும்பொழுது, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை முதலிடம் வகிக்கின்றது என்றும் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆகியோரின் உதவிகளும் தொடர்புகளும் மிகவும் பலம் வாய்ந்ததாக இருப்பதாகவும் பாராட்டினார்.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். செயலாளர்: சட்டத்தரணி செ. கோமலேஸ்வரன், பொருளாளர்: திருமதி ப. மகேசன், உபதலைவர்: ஓய்வுபெற்ற கூட்டுறவு ஆணையாளர் திரு. வி. எஸ். இராமநாதன். 16 பேர்கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்

[யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்கள் தொகை அதிகரித்துள்ளது.

நேற்றுக்காலை பழைய கச்சேரி கட்டடத்தில் பெண்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கியூவில் நின்று விண்ணப்பங்களை பதிவுக்குச் சமர்ப்பித்தனர். (க)

## மாவை கந்தசுவாமி ஆலய உற்சவ ஒழுங்குகள்

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உற்சவ ஒழுங்குகள் குறித்து வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் ஆராயப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர் திரு. க. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேற்படி கோவில் உற்சவகாலத்தில் கூடும் பக்தர்களின் சுகாதார, போக்குவரத்து, பாதுகாப்பு வசதிகளைக் கவனிக்கச்செய்யவேண்டிய ஏற்பாடுகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இவ் ஆலய வருடாந்த உற்சவம் அடுத்தமாதம் 4-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

## புனித சூசையப்பர் ஆலய மணிக்கூட்டுக் கோபுரங்கள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நடுத்தெரு புனிதசூசையப்பர் ஆலயத்தின் முன்பாக நிறுவப்பட்டுவரும் மணிக்கூட்டுக் கோபுரங்களின் அமைப்புக்கு பொதுமக்களிடமிருந்தோ பங்கு மக்களிடமிருந்தோ எதுவித நிதியும் கோரப்படவுமில்லை பெறப்படவுமில்லையென்று மேற்படி பங்குக்குருவானவர், கட்டிட மேற்பார்வையாளர். மற்றும் பங்கு மக்களின் சார்பில் சட்டத்தரணி கே. எஃப். சேவியர் எமக்கு அறிவித்துள்ளார். 12-5-1984 அன்று மணிக்கூட்டு கோபுரங்கள் என்ற தலைப்பில் 'ஈழநாடு'வில் வெளியான செய்திக்கு மறுப்புத் தெரிவித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இரு மணிக்கூட்டுக்கோபுரங்களுக்குமான செலவினங்கள் ஏற்கனவே ரூபா 45 ஆயிரத்துக்கும் அதிகமாகிவிட்டது. கட்டிடங்கள், மணிகள் இன்றி முடிவுறும்போது 50 ஆயிரத்தைத் தாண்டிவிடும். ஆலய வளவில் வெட்டப்பட்ட மரங்களின் விற்பனையிலிருந்து இதற்குப்பணம் பயன்படுத்தப்படவில்லை. மணிக்கூட்டுக்கோபுரங்களில் ஒன்றின் முழுச்செலவும் புனித சூசையப்பர் ஆலயபங்கைச் சேர்ந்த ஒரு தம்பதியால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது இதற்குரிய மணியை அமெரிக்காவிலுள்ள இத்தம்பதிகளின் மகனும்மருமகளும் அன்பளிப்பு செய்துள்ளனர். மற்றைய கோபுரத்துக்கான பணம் இப்பொழுது வெளிநாட்டிலுள்ள இதே பங்கைச் சேர்ந்த இன்னொரு தம்பதிகளின் முயற்சியால் சேகரிக்கப்பட்டு கிரேக்க கப்பல் எஸ். எஸ். குயின்ஸியின் மாலுமிகளால் அன்பளிப்புச்செய்யப்பட்டது.

## யாருடையது?

தெகிவளை குவாரி வீதியைச் சேர்ந்த திரு. மார்க்கண்டு ஜெயசிங்கம் என்பவருடைய அடையாள அட்டையையும், சாரதி லைசென்ஸினையும் ஆசிரியர் திரு. மு. சிவராசா என்பவர் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில்வந்துபெற்றுக்கொள்ளலாம்.

## யாழ். பிரதேச...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

"ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் சுகாதார நிலைவசதி என்பவற்றை அளவிட ஆயிரம் பேருக்கு எவ்வளவு வைத்தியர் உளர் என்பதை விட ஆயிரம் பேருக்கு எவ்வளவு தூய நன்னீர் வழங்கும் குடிநீர் குழாய்கள் உள என்பது ஒரு பொருத்தமான திருத்தமான முடிவுக்கு இட்டுச் செல்லும் குறிக்காட்டியாகும்". என்பதுதான் அதுவாகும்.

### சனத்தொகை பிரச்னை

சனத்தொகைப் பெருக்கமும் அதன் விளைவால் சுகாதார வசதிகளும் யாழ் நகரில் பெரும் பிரச்னையாகவுள்ளது. சனத்தொகைப் பெருக்க விளைவால் தனிமனித சுகாதார வசதிகளினளவு குறையும் சூழற்சமநிலையில் பாதிப்பு ஏற்படவாய்ப்புகள் உண்டாகும். வீடமைப்புச் செயற்பாட்டுக்கு காடழிப்பு நடைபெறுவது தெரிந்ததொன்று. இதற்கு நாம் முன்னெச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

சனத்தொகை அதிகரிப்பால் வீடுகள் நெருக்கமாயும் மலசலகூடங்கள் அதிகரிப்பதனாலும் நெருக்கமாவதாலும் கிணறுகட்கண்மையில் மலசலகூடங்கள் அமைவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. ஆனால் மாநகரசபை விதிகளின்படி இவற்றிற்கிடையேயுள்ள இடைத்தூரம் பாறைத்தரையாயின் 50 அடியாயும் இளகிய மண்ணுயின் 75 அடியும் இருச்கவேண்டும். பொதுவாக 60 அடி ஆக இருப்பது விரும்பத்தக்கது. உள்ளூராட்சி மன்றங்களின் கழிவகற்றும் சேவைகளும் கடினமாக்கப்பட்டு பெருஞ்சுமையாக்கப்படுகிறது. எனவே இறுதியாக கழிவுகள் [illegible] [illegible] இதன் விளைவாக பலதொற்று நோய்கள் பரவ வாய்ப்புண்டு. நீர், நிலம் என்பன ஒருங்கே மாசுபடுவதால் நெருப்புக் காய்ச்சல், வாந்திபேதி என்பன வேகமாகப் பரவலாம். கழிவுகளை கடற்கரையோரங்களில் அல்லது சனநடமாட்டமில்லாதவிடத்தில் கொட்டி விடுவதனால் பிரச்னைகள் முற்றுப்பெற்று விடாது. மாறாக எரிப்பதனாலும் நில நீர் மாசுகள் வளிமாசுக்களாக மாற்றப்படுவதும் சாத்தியம். இவற்றை உருமாற்றி சேதனப்பசளைகள் போன்றவற்றைத் தயாரித்தற்கு ஆலோசனை செய்ய வேண்டும். இதனால் வருவாயும் செயற்கைப் பசளைகளால் விளையும் கேடுகளும் கூட நிவர்த்திக்கப்படும் எல்லோரும் ஒருமுகப்பட்ட பொது நல உள்ளத்துச் சிந்தனையுடன் உழைத்தால் சுற்றுடல் மாசடைவதென்ற நிலையே படிப்படியாக மறைந்துவிடும்.

# செய்தித் தணிக்கை

அவசரகாலச்சட்டம் 14 (1) விதிகளுக்கு அமைய பின்வரும் விஷயங்களை பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு முன்னர் ராஜாங்க அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெறவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது

- பயங்கரவாதத்துடன் தொடர்புடைய வன்செயல் பற்றிய நடவடிக்கைகள்.
- கொள்ளை மற்றும் அரசாங்க தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் — தாக்குவோர்— ஆயுதம் தாங்கியவர்களாக இருந்தால்
- பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகள் அல்லது பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றிய விசாரணைகள்.
- கொழும்பில் இஸ்ரேல் நலன்காப்புப் பிரிவு ஏற்படுத்துவதற்கும் அல்லது பாதுகாப்புச் சேவை மற்றும் பொலிஸ் பயிற்சிக்காக எவரிடமாவது உதவி கேட்டலுக்கு எதிரான ஆட்சேபங்கள்.
- தேசிய ஒற்றுமையும் சட்டத்தையும் அல்லது சமுகத்திற்குத் தேவையான விநியோகம், சேவைகள் போன்றவற்றை பாதிக்கக்கூடிய விஷயங்கள்.

# "மாணவ சமுதாயம் அழிவுப் பாதையைநோக்கிச்செல்கிறது

(யாழ்ப்பாணம்)

"இன்றைய மாணவர் சமுதாயம் நூல் அறுந்த பட்டங்கள் போல அலைந்து அலைந்து சென்று, அழிவுப் பாதையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. ஆசிரியர்களுடையவழிகாட்டலையோ. பெற்றோரின் கட்டுப்பாடுகளையோ அவர்கள் புறக்கணித்து விடுகிறார்கள். நூலும் வாலும் இல்லாத பட்டம் ஒன்று, எவ்வாறு காற்றிலடிபட்டு, பற்றைகளில்சிக்கிக் கிழிந்து நாசமாகி விடுமோ, அவ்வாறே ஆசிரியர்களையும், பெற்றோரையும் மதித்து நடவாத பிள்ளைகளும், தீய சூழ்நிலைகளிற் சிக்கிச் சீரழிந்துவிடுகிறார்கள். எனவே பெற்றோர், பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்த்துவிடுவதோடு, தமது கடமை முடிந்து விடுகிறதென்று இருந்து விடாமல், தொடர்ந்து பிள்ளைகளைக் கவனித்து வரவும் வேண்டும். இல்லையெனில், நூலறுந்த பட்டத்தின் நிலைமையே எமது பிள்ளைகளுக்கும் ஏற்பட்டுவிடும்."

இவ்வாறு கொழும்புத்துறை ஆண்கள் வித்தியாலயத்தின் பாடசாலைஅபிவிருத்திச்சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் தலைமைவகித்துப் பேசுகையில் அதிபர் திரு.ஜீ.பி அல்பிறெட் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "ஒரு பிள்ளையை "ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டால், அங்கேயே அப்பிள்ளையுடன் தங்கிவிட விரும்புகின்றோம். டாக்டரை அடிக்கடி சிரமப்படுத்திப் பிள்ளையின் நிலைமை என்னவென்று ஆவலுடன் கேட்டுத் தெரிந்து கொள்ளுகின்றோம். என்னென்ன பிள்ளைக்குத் தேவையோ அவற்றையும் வாங்கிக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறோம். ஆனால் பாடசாலையைப் பொறுத்தவரை நிலைமை எதிர்மாறு பிள்ளைகளைச் சேர்க்கும் தினத்திலேயே பெற்றோரின் முகத்தைக் காணமுடியும், சில பெற்றோரை அன்றைய தினத்திலுங் காணமுடியாது. இப்படியானால் இத்தகைய பெற்றோரின் பிள்ளைகளுடைய நிலைமைபற்றி குறைபாடுகள் பற்றி, வளர்ச்சிபற்றி யாரோடுதான் நாம் கலந்து பேசுவது இன்னொரு விடயத்தையும் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

"பாடசாலை எல்லாம் அரசாங்கச்சொத்துக்கள் பிள்ளைகளும் அரசாங்கச் சொத்துக்கள். எனவே பாடசாலைத் தேவைகள் எல்லாவற்றையும் பிள்ளைகள் தேவைகள் எல்லாவற்றையும் அரசாங்கமே பார்த்துக் கொள்ளும், கட்டிடம் தளபாடம் புத்தகம் பிஸ்கட் எல்லாமே அரசாங்கம் செய்து கொடுக்கும் நமக்கென்ன" என்று இருந்துவிடுவது, அரசாங்கத்தையே நாம் எதற்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. பாடசாலை ஒன்றின் பல தேவைகளை நாம் தான் பூர்த்தி செய்ய வேண்டும், சில வசதிகளைஅரசாங்கம் செய்துகொடுக்கும். நமது பிள்ளைச் செல்வங்களின் எதிர்கால நல்வாழ்வைக்கருத்திற்கொண்டு, நாம் இவ்வாறு செயற்படுவதே நல்லதாகும்" என்றார்.

இக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண வட்டாரக் கல்வியதிகாரி திரு இ. சிவானந்தன் பேசுகையில் "கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. ப. பரீட்சையில் விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய இரு பாடங்களிலும், இப்பாடசாலை யாழ். மாவட்டத்திலுள்ள பெரிய பாடசாலைகளையும் விடச் சிறப்பான முறையில் சித்தி பெற்றிருப்பது குறித்து யாழ்ப்பாண கல்வித் திணைக்களமே பெருமையடைகிறது. அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோரின் முயற்சியாலும், ஒத்துழைப்புக்காரணமாகவும் இப்பாடசாலை துரித முன்னேற்றம் அடைந்து வருகிறது. மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துகின்றேன். பாடசாலை உங்கள் சொத்து. இப்பாடசாலையை — பாடசாலைச் சொத்துக்களை எல்லாம் நீங்கள் பாதுகாக்க முன்வரவேண்டும்" என்று கூறினார்.

நடப்பாண்டு உத்தியோகத்தர்கள் தெரிவில், பதவி வழித்

[8ம் பக்கம் பார்க்க)


# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி அல்பிரெட் அம்மா



எம்மை விட்டு நீங்கினும் எங்கள் இதயக் கோவிலில் அணையாச் சுடர் விளக்காய் இருந்து காலவோட்டத்தின் சருகாய் உதிர்ந்த எம் அன்பின் (கற்புக்கு) அரசியே, நீங்கள் பிரிந்து ஈராண்டு சென்றாலும் உம் நினைவுகள் எம் மனதில் பசுமையாய் நிற்கின்றன. உமது வழியில் எமது வாழ்வைத் தொடரும் அன்புச் செல்வங்களும் தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவன் நின்பதம் வேண்டுகின்றோம்.

பிள்ளைகள்

மண்டைதீவு. 357


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### குடியிருப்பு நிலங்கள்

# சுவீகரிக்கப்படலாமென பலாலி மக்கள் அச்சம்

## பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு மகஜர்

(மாவிட்டபுரம்)

பலாலிப்பகுதியில் பொது மக்களின் குடியிருப்பு நிலங்களும், விவசாய நிலங்களும் சுவீகரிக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுவதையடுத்து பாதிக்கப்படுவோர் சார்பில் பலாலி, வசாவிளான் பிரஜைகள் குழுவினால் ஜனாதிபதிக்கும், தேசிய பந்தோபஸ்து அமைச்சருக்கும் மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்த காணி சுவீகரிப்பு பாதிக்கப்பட்டவர்களின் கையெழுத்துக்களுடன் கூடிய இம் மகஜர்களில் மேற்படி காணி சுவீகரிப்பால் அப்பகுதியில் குடியிருப்போர் பாதிக்கப்படுவதுடன், அப்பகுதியில் பெருந்தொகையாக விவசாயம்செய்யும் விவசாயிகளும் பாதிக்கப்படுவோர்களாகையால் இம் முயற்சியை கைவிடவேண்டுமென கோரப்பட்டுள்ளது.

யாழ். அரசாங்க அதிபருக்கும் இம்மகஜரின் பிரதியொன்று நேரில் கையளிக்கப்பட்டு, மேற்படி விடயம் குறித்து அவருக்கு விரிவாக எடுத்துக் கூறப்பட்டதாக பலாலி - வசாவிளான் பிரஜைகள் குழு பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி மகஜரில் தற்போது போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ள பலாலி-வசாவிளான் வீதியை பொது மக்கள் பாவிப்புக்காக திறந்துவிடுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது,

## ரூபவாஹினியில் இன்று

மாலை

5-30 லெஸ்டல் அன்ட் ரிரயின்ஸ் (ஆங்கிலம்)
6-00 இசை நிகழ்ச்சி (சிங்களம்)
6.25 சிறு ஏற்றுமதிப் பயிர்கள் - விவரணம் (தமிழ்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 எதிர்கால நிகழ்ச்சிகள்
7-45 மேற்கத்திய இசை நிகழ்ச்சி
8-15 செய்திகள் (சிங்களம்)
8.35 சிறைவில் நெற்செய்கை விவரணம் (ஆங்கிலம்)
9-00 'டிபரன்ற் ஸ்ரோக்ஸ்' நகைச்சுவை சித்திரம் (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 கனடா சர்வதேச ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய தகவல் நிகழ்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 நிகழ்ச்சிகள் முடிவு.

### அகதிகள் குடும்பங்களுக்கு வீடுகள்:

## 'நொருட்' ஸ்தாபனம் ரூ. $3\frac{1}{4}$ லட்சம் அன்பளிப்பு

[மாவிட்டபுரம்]

வல்லை லயன்ஸ் வைத்தியசாலையில் பணிபுரியும் அகதிகள் குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்க நோர்வே 'நொருட்' ஸ்தாபனம் மூன்றேகால் லட்சம் ரூபா அன்பளிப்புச்செய்துள்ளது.

வல்லை வைத்தியசாலையை மாவிட்டபுரம் லயன்ஸ் கழகம் பொறுப்பேற்று நிர்வகித்து வருவதுடன், இவ்வைத்தியசாலையில் ஜூலை கலவரத்தால் அகதிகளாக வந்தவர்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வைத்தியசாலையில் கடமைபுரியும் அகதிகள் குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க நோர்வே 'நொருட்' ஸ்தாபனத்திடமிருந்து மூன்றேகால் லட்சம் ரூபா நிதியுதவி கிடைத்துள்ளது.

இந்த நிதியில் 13 வீடுகளை அமைக்கத் திட்டமிடப்பட்டு இதற்கானஅடிக்கல்லை லயன்ஸ் கழக ஆளுநர் டாக்டர் பாமி இஸ்மயில் நாட்டிவைத்துள்ளார்.

மாவிட்டபுரம் லயன்ஸ் கழகத்தலைவர் திரு. இ. மனோகரன் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் ஆளுநர் பேசுகையில்: ''லயன்ஸ் கழகத்தை பொதுமக்கள் மக்கு நேர்மையுடன் சேவைசெய்யும் ஸ்தாபனமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும், அதற்காக லயன்ஸ் கழகத்தினர் மக்களது தேவைகளை அறிந்து அதற்கேற்ப சேவையாற்றுவது அவசியமெனவும்'' கூறினர்.

லயன்ஸ் கழக பிரமுகரும், வர்த்தக பிரமுகருமான திரு. தி. குமாரவேலும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டார்.

## ஓமந்தையில் இளைஞர் சுட்டுக் கொலை

[வவனியா]

ஓமந்தை என்ற இடத்தில் 24வயதுடைய இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஓமந்தை இறம்பைக் குளம் என்ற இடத்தைச் சேர்ந்த தெய்வேந்திர மகாராஜா என்ற இளைஞனே இனந்தெரியாதவர்களினால் சுடப்பட்டு மரணமாகியுள்ளார்.

காணிப்பிரச்னை ஒன்றின் காரணமாக இவர் சுடப்பட்டிருக்கலாம் என்று பொலிசார் கருதுகின்றனர்.

இறந்தவர் தமது கமத்துக்கு சைக்கிளில் சென்று வேலியில் சைக்கிளைச் சாத்திவிட்டுநிற்கையிலேயே துப்பாக்கியால் சுடப்பட்டு அங்கு மரணமாகியுள்ளார் எனப்பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவருகின்றது.

வவனியாப் பொலிசார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இறந்தவரின் தகப்பனும் அண்மையில் கொலைசெய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய வானொலியில்

காலை

5-30 நாதாஞ்சலி
5-35 திருமுறைப் பாடல்கள் நாகம்மா மகாலிங்கம்
6-00 சைவநற்சிந்தனை
6-05 இஸ்லாமியநற்சிந்தனை
6-10 பாமாலை
6-25 நிகழ்ச்சிமுன்னோட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப் பாடல்கள்
7-00 புல்லாங்குழல் - என். ரமணி
7-30 மாகாணச்செய்திகள்
7-35 இசையமுதம்
8-05 வாத்தியமஞ்சரி
8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
8-45 காலை ஒலிபரப்பு முடிவு

மாலை

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-20 இப்தார் நிகழ்ச்சி
6-35 கோபுரதரிசனம் - திருநெல்வேலி தலங்காவில் பிள்ளையார் கோவில்
7-05 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
8-00 உலகச் செய்திகள்

இரவு

8-10 களத்துமேடு
8-25 முகத்தார் வீட்டில்
8-40 நாட்டுப்பாடல்
8-45 கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள்
9-30 நாதஸ்வரம் - நாபகிரிப்பேட்டை கிருஷ்ணன்
10-30 ஒலிபரப்பு முடிவு

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு - முகப்புவயல் ஸ்ரீசுப்பிரமணியசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறும் மகோற்சவத்தில் 27ம் திகதி தேர்த்திருவிழாவும் 28ம் திகதி தீர்த்த திருவிழாவும் நடைபெற்று 30ம் திகதி திருக்கல்யாணத்துடன்மகோற்சவம் முடிவுறும்.

கோவில் சங்காபிஷேகமும் இன்று நடைபெறுகிறது. (சு)

## மண்டலபூர்த்தி சங்காபிஷேகம்

(மானிப்பாய்)

மயிலங்கூடல் அருள்மிகு ஞானபைரவ சுவாமி கோவில் மண்டல பூர்த்தி சகஸ்ர சங்காபிஷேகம் 20-ம் திகதி புதன் கிழமை பகல் நடைபெறும்.

அன்றிரவு சுவாமி வீதிவலம் வருதலும் வில்லிசை மேளக் கச்சேரி என்பனவும் நிகழும். (ப)

## இன்றைய பலன்

மாதம்—ஆனி
திகதி—5 (19-6-1984)
வாரம்—செவ்வாய்
திதி—ஷட்டி- இரவு 1-32 வரை
நட்சத்திரம்—சதயம் முழு நாளும்

**மேடம்:** எதிலும் தயக்கநிலை தென்படும் நண்பர்களும் குறைகூறுவார்கள் பொருளாதாரத்துறையில் மந்தநிலை தென்படும் வாயவு ரோகங்களுக்கு இடமளியாது உணவு விடயத்தில் கவனம் செலுத்துக.

**இடபம்:** மனம்நிறைந்த சம்பவங்கள் இடம்பெறும் பெரியவர்களின் ஆசி தாராளமாகக் கிடைக்கும் கைவிடப்பட்ட பணவரவு மீண்டும் கிடைப்பதற்கு இடமுண்டு வீட்டிலும் மகிழ்ச்சியுண்டு.

**மிதுனம்:** இனந்தெரியாத கவலையால் சோர்வடைவீர்கள் வாய்வுப் பதார்த்தங்களை தவிர்த்துக் கொள்ளவும் சகோதரவழியால் கவலை தோன்றக் கூடும் பெரியவர் ஒருவரின்அறிவுரை ஆறுதலைத்தரும்.

**கடகம்:** திட்டமிட்டபடி வாழ்க்கை நடக்கும் சிரமமான காரியங்களை இலகுவாகச் செய்து முடிப்பீர்கள் தங்கள் திறமை சுடர்விட்டுப் பிரகாசிக்கும் பொதுசனத் தலைமைக்கும் இடமேற்படும்.

**சிங்கம்:** மகிழ்ச்சிதரும் செய்தியொன்று கிடைக்கக் கூடும் பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் குடும்பத்தில் உறவு முறைகள் மிகவும் சுமுகமாக இருக்கும் அறவழிகளில் நாட்டம் ஏற்படும்,

**கன்னி:** மிகவும் நிதானத்துடன் காரியங்களில் ஈடுபட வேண்டும் எச்சந்தர்ப்பத்திலும் அவசரப்போக்கைத் தவிர்த்துக் கொள்ளவும் நீண்ட பிரயாணத்தை இன்று தள்ளி போடுவது நன்று.

**துலாம்:** வாழ்க்கையில் தென்றல்வீசும் முதியவர்கள் உங்களுக்கு உதவுவதற்கு முன் வருவார்கள் குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரலாம் தெய்வத்தின் துணையும் உண்டு.

**விருச்சிகம்:** உறவு முறைகளில் பிளவுகள் தென்படும் மனதில் உற்சாகம் குன்றும் அபாயகரமான காரியங்களில் ஈடுபடாதிருத்தல் நன்றுஇனத்தவர்களுடன் பகைத்துக் கொள்வீர்கள்.

**தனுசு:** பொதுப்பணி மூலம் புகழுக்கு இடமுண்டு அரசியல் வாதிகளுக்கு அதிர்ஷ்டம் அடிக்கலாம் பிதாவழிமூலம் பொருள்வரவு தரும் கைங்கரியங்களில் விருப்பு மேலிடும்.

**மகரம்:** தொழில் துறையில் நல்ல வருமானம் கிடைக்கும் வணிகர்களுக்கு ஆதாயம் உண்டு புதிய உடன்படிக்கையின் மூலம் நல்ல திருப்பம் ஏற்படும் மகிழ்ச்சிகரமான பிரயாணமும் உண்டு.

**கும்பம்:** உடல்நலத்தில் அபிவிருத்தி தென்படும் குடும்பத்தில் சுபகருமங்களும் இடம்பெறும் பயன்தரக்கூடியஉடன்படிக்கையொன்று இன்று கைச்சாத்திடப்படலாம் கண்ணியமான நாள்.

**மீனம்:** பணம் பறிபோவதற்கு இடம் ஏற்படலாம் முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடனிருக்கவும் அதிக சிந்தனைக்கு இடமளியாது வாய்வுப் பதார்த்தங்களை தவிர்க்கவும்,

திருமலை
வே. ரவீந்திரன்

# கூடுதலாகப் பாதிக்கப்பட்ட 21 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்!

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் கல்வியமைச்சரிடம் சமர்ப்பித்த பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றப்பட்டியலிலுள்ள 287 பேர்களில் கூடுதலான பாதிப்புக்குள்ளான 21ஆசிரியர்களின் இடமாற்றம் அமுல்செய்யப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. க. சிவஞானம் தெரிவித்தார்.

திரு. சிவஞானம் மேலும் கூறியதாவது:- ஜூலைக் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களில் முதலில் 144பேருக்கு இடமாற்றம் வழங்குமாறு ஒரு பட்டியலைச் சமர்ப்பித்தோம். பின்னர் 143 பேருக்கு இடமாற்றம் வழங்கும்படி இரண்டாவது பட்டியலைசமர்ப்பித்தோம். இந்தஇரு பட்டியல்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதோடு கொழும்புப் பகுதிகளில் கடமையாற்றிய 113 பேரை காரியவாசம் கமிட்டி இடமாற்றத்திற்குச் சிபார்சு செய்திருந்தது. இதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

பழைய இடங்களுக்குப் பலர் வேலைக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள் பழைய பாடசாலைகளுக்குச்சென்று கடமையை ஏற்றல் மட்டும் போதாது. அந்தப்பகுதி வட்டாரக் கல்வி அதிகாரியின் சிபார்சுடன் அப்பகுதிக் கல்விக் கந்தோருக்கு நேரில் சென்று கல்வி அதிகாரிக்குத் தன்கடமை ஏற்றுள்ளதைஅறிவிக்கவேண்டும்.

சிலபாடசாலைகளில் அதிகாரிகள் அவர்களை அனுமதிப்பதில்லை என்ற தகவல் கிடைத்துள்ளது. அப்படியான நிலையிலுள்ளவர்கள், அப்பகுதிவட்டாரக் கல்வி அதிகாரிக்குத் தெரிவித்து, அதன்பின் அப்பகுதிக் கல்விக் கந்தோருக்குச் சென்று கல்வி அதிகாரிகளுக்கு அறிவிக்கவேண்டும். அவரிடம் அதற்கான 'றிசிட்' வாங்கி வைத்திருக்கவேண்டும்.

வேலையைப் பாரமெடுத்தவர் தொடர்ந்து வேலை செய்கிறார் என்று கல்லூரி அதிபர் உறுதிப்படுத்தவேண்டும். அந்த உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தைக் கல்விக்கந்தோர் சம்பளப்பகுதியில் சமர்ப்பித்து சம்பளப்பட்டியலில் அவரது பெயர் இடம் பெறச்செய்யவேண்டும். (க)

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கல்வி வட்டாரத்திலுள்ள உயர்வகுப்பு மாணவர்களுக்கான கருத்தரங்குகள் நல்லூர் கல்விமூலவள நிலையத்தினரால் நடாத்தப்பட்டுவருகிறது .இதில்பல உயர்தரப் பாடசாலைகளுட்பட எல்லாப் பாடசாலை மாணவர்களும் கலந்து பயனடைந்து வருகிறார்கள். இதற்கான ஒழுங்குகளை நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி தலைமையில் கல்விமூலவள நிலையப்பொறுப்பாசிரியர்கள் திரு. பி. நடராசா, திரு. வி. பாலசுப்பிரமணியம் ஆகியோர் கவனித்து வருகின்றனர்.

கருத்துரை வழங்குவதற்காக யாழ். பல்கலைக்கழகப்பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் முன்வந்து செயல்பட்டு வருகிறார்கள். சமூகக்கல்வி, பொருளியல், புவியியல், இந்துநாகரிகம் ஆகிய பாடங்களுக்கான [illegible]

## மண்ணெண்ணை தட்டுப்பாடு

[வவனியா]

வவனியா நகரில் மண்ணெண்ணை தட்டுப்பாடாகவுள்ளது.

இதனால் தோட்டச் செய்கையாளர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

மண்ணெண்ணை பெறுவதற்காக அதிகாலையிலேயே சில எரிபொருள் விற்பனை நிலையங்களின்முன் மக்கள் நீண்ட கியூ வரிசையில் காணப்படுகின்றனர்.

வவனியா பகுதியில் இப்பொழுதுதான் தோட்டச் செய்கை ஆரம்பித்துள்ளது.

## வயோதிபர் பலி!

(யாழ்ப்பாணம்)

இணுவிலில் நேற்று நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் எஸ்.சுப்பிரமணியம் என்ற 60 வயது வயோதிபர் பலியானார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 2-30, 5-30
**மீண்டும் கோகிலா**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
**லொறி ட்றைவர் ராஜாக்கண்ணு**

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
ஜெமினி, சுஜாதா, கமல், தேங்காய்
**"லலிதா"**
(புதிய வண்ணப் பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
**உல்லாசப் பறவைகள்**
20-6-84
**மௌன கீதங்கள்**

**வின்சர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
5-வது வெற்றி வாரம்
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
**ஒளிவிளக்கு**
(புதிய வண்ணப் பிரதி)
விரைவில்
புரூஸ்லியின்
**BIG BOSS**

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-30 6-30
Weng Weng
FOR YOUR HIGHT ONLY
(Color)
20-6-84 முதல்
SHOGUN'S NINJA

**றீகல்** (யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 6-30
Edward Albert
GALAXY OF TERROR
(Horror-Terror-Adults)
(இதுபோல் பயங்கரமான படம் இதுவரை வந்திருக்கவே மாட்டாது.)
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு!

18 முதல் 20 வரை
**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30 6-15
ஜெமினி-பானுமதி-முத்துராமன்- ராஜஸ்ரீ-நாகேஷ்- மனோரமா-சுப்பையா- S.வரலட்சுமி
நடித்த
**அவரே என் தெய்வம்**
(புதிய பிரதி)
உன்னத குடும்பச்சித்திரம்.

**மனோகரா** (யாழ் நகர்)
அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க குறிப்பிட்ட சில தினங்கள் நீடிக்கப்பட்டுள்ளது. இதுவே கடைசிச் சந்தர்ப்பம்.
தினசரி 10-30, 2-15 4-45, 7-00
THE POSTMAN ALWAYS RINGS TWICE
கலர் (கண்டிப்பாகவயது வந்தவர்களுக்கு)

# பொலிஸ் - பொதுமக்கள்

## நல்லுறவுக் கமிட்டி உறுப்பினர்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் வட்டார பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவுக்கமிட்டி விபரத் தொடர்ச்சி வருமாறு:-

கிராம சேவகர் பிரிவு-மானிப்பாய்: தலைவர் பி. செல்வரட்ணம், 'மன்ரம்'' வௌரன் வீதி, மானிப்பாய், செயலாளர்-எஸ்.ராமதிலகம், தாவடி வீதி, மானிப்பாய், உறுப்பினர்கள்: எஸ். ராஜேந்திரன், சட்டத்தரணி, மானிப்பாய், ரி. மகேந்திரன், செல்லமுத்து வீதி, மானிப்பாய், எஸ். சதாசிவம், மானிப்பாய் மேற்கு, எஸ். அப்புத்துரை, ஆனந்தா வீதி, மானிப்பாய், எஸ். சிவகுமாரன், கட்டுடை, மானிப்பாய்.

கிராம சேவகர் பிரிவு-வண்.வட மேற்கு: தலைவர்-ஈ. சிவசோதி, ஏ, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம், செயலாளர்: வி நடராஜா, மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை, உறுப்பினர்கள்: பி. சண்முகநாதன், 15, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம், என். வாமதேவா, 557/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம், எஸ். செல்லையா, 15, முருகமூர்த்தி வீதி, யாழ்ப்பாணம். ஈ. கனகசபாபதி, 21எ, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம், பி. குமாரசாமி, பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை.

கிராம சேவகர் பிரிவு-அரியாலை மேற்கு: தலைவர்-எஸ். ஜெயரட்ணம், 77, பாரத வீதி, அரியாலை, செயலாளர்-வி. பகவத்சிங்கம், 100, கண்டி வீதி, அரியாலை, உறுப்பினர்கள்- எஸ். கோபாலசிங்கம், 29, சுப்பிரமணியம் வீதி, அரியாலை, கே. மகேஸ்வரன், 24, திருமகள் வீதி, யாழ்ப்பாணம், என். நல்லையா, 12; கனகரட்ணம் வீதி, அரியாலை, எஸ். விக்னேஸ்வரா, 165, சின்னக்கிணறு வீதி, அரியாலை.

கிராம சேவகர் பிரிவு-கொழும்புத்துறை: தலைவர் எம். அமிர்தவாசகம், 01, மூன்றும் குறுக்குத் தெரு, பாஷையூர், செயலாளர்-எம். சுப்பிரமணியம், 42, புதுவீதி, கொய்யாத்தோட்டம், உறுப்பினர்கள்- ஆர். செல்வராஜா, 169, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம், எம். அம்புரோஸ், 44, பீச் றோட், பாஷையூர், வி. பி. மரியாம்பிள்ளை, 951/13A, பீச் றோட், பாஷையூர், டி. பி. இமானுவேல், 325, 11-ந் தெரு, மணியம் தோட்டம், கொழும்புத்துறை, கே. ஆபிரகாம்லிங்கம், 15, மூன்றும் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

கிராம சேவகர் பிரிவு-அரியாலை கிழக்கு: தலைவர் எக்ஸ். ஆர். பிரான்ஸிஸ், 1, சென். ஜுட்ஸ் அவென்யு, அரியாலை, செயலாளர்- ஈ. மாசிலாமணி, கண்டி வீதி, அரியாலை, உறுப்பினர்கள்: கே. எஸ். நடராசா, கண்டி வீதி, அரியாலை, கே. கதிர்காமநாதன், பொன்னம்பலம் வீதி, அரியாலை, எஸ். செல்வரட்ணம், தலைவர்: ஆர். டி. எஸ். நாவலடி, அரியாலை, ரி. கிருஷ்ணபிள்ளை, பொறியியலாளர், அருளம்பலம் வீதி, அரியாலை, எம். ஸ்ரீரங்கநாதன் குகன் வீதி, அரியாலை.

கிராம சேவகர் பிரிவு-சுதுமலை: தலைவர்- எஸ். மார்க்கண்டு, சுதுமலை அம்மன் கோவிலடி, மானிப்பாய், செயலாளர்- எஸ். கனகசுந்தரம், சுதுமலை தெற்கு, மானிப்பாய், உறுப்பினர்கள்- எ சிவதாசன், சுதுமலைவடக்கு, மானிப்பாய், பி. தவராசா, சுதுமலை வடக்கு, மானிப்பாய், வி. தம்பிராசா, சுதுமலை தெற்கு மானிப்பாய், எம். கந்தசாமி, சுதுமலை, மேற்கு மானிப்பாய், எஸ். அம்பிகாவதி, சலாகட்டு, சுதுமலை, மானிப்பாய்.

கிராம சேவகர் பிரிவு - நவாலி - தலைவர் - பி. பரராஜசேகரம், இளைப்பாறிய கிராமத் தலைவர், நவாலி, செயலாளர் கௌரிகாந்தன், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர், நவாலி, மானிப்பாய், உறுப்பினர்கள்: ஜே. பி அருமைநாயகம், அரசாங்க ஆசிரியர், நவாலி தெற்கு, மானிப்பாய், ஜே தம்பிராஜா, வை. எம். சி. ஏ. நவாலி தெற்கு; மானிப்பாய், என். சி. முருகேசு, இளைப்பாறிய ஆசிரியர், நவாலி தெற்கு, மானிப்பாய், எம். பரமநாதன், ப. நோ. கூ. ச இல 7, நவாலி தெற்கு, மானிப்பாய், எம். செல்வராஜா, ப. நோ. கூ. ச. மானிப்பாய், நவாலி தெற்கு, மானிப்பாய்.

(மிகுதி நாளை வரும்)

## வீட்டுத்தோட்டப்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நிபந்தனைகள் தொடர்பான நிபந்தனைகள் பற்றி விபர சுற்றறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

நன்கு பராமரிக்கப்பட்ட முதல் மூன்று வீட்டுத்தோட்டச் செய்கையாளருக்கும் ரொக்கப் பரிசுகள் வவுனியா சர்வோதய நிலையத்தினரால் வழங்கப்படுவதுடன், வவுனியா மாவட்ட அரச அதிபரின் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

போட்டி தொடர்பான விபரங்களைப் பெறவிரும்புவோர் வவனியா தெற்கு தமிழ்பிரிவு உதவி அரச அதிபர் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என வவனியா முல்லைத்தீவு மாவட்ட சர்வோதய இணைப்பாளர் திரு. க. கதிரடலை தெரிவித்தார்,

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-15
ஜெய்சங்கர்
**வண்டிக்காரன் மகன்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 4-30, 7-00 p.m.
Kelly Reno
Mickey Rooney
THE BLACK STALLION
"Absolutely Wonderful entertainment"

## பி. பி. ஸி யில் இன்று

(லண்டன்)

1983 ஜூலையில் இலங்கையில் இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பான செய்திப்படமொன்றை இன்று பி. பி. ஸி. ஒளிபரப்புச் சேவை காண்பிக்கவுள்ளது.

45 நிமிடம் ஒளிபரப்பப்படும் இந்தப் படத்திற்கு 'சிவனின் மக்கள்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இலங்கை எனும் தீவில் 1983 ஜூலையில் இடம்பெற்ற இன மோதல்களை சித்தரித்து சிங்கள மக்களினால் தமிழர் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்தப் படம் அமைந்துள்ளது

இது தொடர்பாக லண்டனிலுள்ள இலங்கைத் தூதுவர் பி. பி. ஸிக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளார் (சூ)

## இலவச கண் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் முதலாவது இலவச கண் சிகிச்சை முகாம் எதிர்வரும் 24ம் திகதி காலை 8 மணிக்கு கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது என்று கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் செயலாளர் திரு ச. சண்முகேந்திரன் தெரிவித்தார்.

இம் முகாமில் கண் சிகிச்சை நிபுணர் டாக்டர். சி. அருணசலம் பரிசோதனைகளை மேற்கொள்வார்

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் மகாவித்தியாலய பரிசளிப்புவிழா இம்மாதம் 23-ம் திகதி சனிக்கிழமை வித்யாலய மண்டபத்தில் நடைபெறும்.

விழாவில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார், திருமதி ஜே. சியியாம்பிள்ளை பரிசில்களை வழங்குவார்.

மகா வித்தியாலய நிறுவுனர் நினைவுப் பேருரையை வைத்திய கலாநிதி மு. வேதாரண்யம் நிகழ்த்துவார், (ப)

## உரக்களஞ்சியம்

(ஓட்டுசுட்டான்)

முத்துஐயன் கட்டுகுளம் விவசாயிகளின் நலன் கருதி 55 ஆயிரம் ரூபா செலவில் உரக் களஞ்சியம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இக்களஞ்சியம் எதிர்வரும் சனிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த உரக்களஞ்சியத்தால் 2000 க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன்பெறவுள்ளனர். இக் களஞ்சியத்திற்கு பல ஆயிரம் ரூபா பெறுமதியான உரம் கிருமிநாசினி விவசாய உபகரணங்கள் முன் கூட்டியே அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது.

## நீர்வழங்கல்சேவை

(மன்னார்)

மன்னாரில் அமைக்கப்பட்டுள்ள புதிய தண்ணீர்த் தாங்கியிலிருந்து நீர்வழங்கும்சேவை ஆரம்பிக்கும் வரை மன்னார் பகுதியில் புதிதாக நீர் வழங்கும் இணைப்புகள் பொருத்தப்படமாட்டாது.

இவ்வாறு மன்னார் கச்சேரியில் நடைபெற்ற நீர் வழங்கல் ஆலோசனைசபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

15 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட்:

## இறுதிப் போட்டிக்கு யாழ் இந்துக் கல்லூரி தகுதி

### புவனேந்திரன் ஆட்டமிழக்காது 139 ஓட்டங்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றுக்கிடையிலான 15 வயதுக்குட்பட்டவர் அரையிறுதி கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி வெற்றிபெற்றது. இப்போட்டி கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

ஸ்கோர் விபரம்; யாழ், இந்து முதலில் துடுப்பெடுத்தாடியது. 6 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 269 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் கே. புவனேந்திரன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 19 பவுண்டரிகள், 1 சிக்ஸர் உட்பட 139 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார், ரி. பகீரதன் 34 ஓட்டங்கள், பி. பிரபானந்தன் 29 ஓட்டங்கள், பி. ஸ்ரீகணேசன் 21 ஓட்டங்கள், எஸ், ரவிக்குமார் 19 ஓட்டங்கள். யாழ்ப்பாணக் கல்லூரி பந்துவீச்சாளர்களான ரி. சந்திரபால் 49 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகள், பி, சிறீபதி 52 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட், எம். விஜயநாயகம் 74 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட், ஜி. எல். நாராயணன் 23 ஓட்டங்களுக்கு ஒரு விக்கட்டினையும் வீழ்த்தினார்கள்.

யாழ்ப்பாணக் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 105 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. ஆர். ஜீவநாதன் 42 ஓட்டங்களையும், என். நித்தியராஜயன் ஆட்டமிழக்காது 26 ஓட்டங்கள், ரி. ஸ்கந்தகுமார் 12 ஓட்டங்கள் யாழ், இந்து பந்துவீச்சாளர்களான எஸ். சுரேஷ் சிறப்பாகப் பந்துவீசி 24 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார். பி. பிரபானந்தன் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகள், எஸ். ஞானமோகன் 3 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட் கே. புவனேந்திரன் 9 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட், ரி. பகீரதன் 35 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்கள். இறுதியில் ஆட்டம் முழுதும் முடியாத நிலையில் முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தின் அடிப்படையில் யாழ். இந்துக்கல்லூரியே வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளத் தகுதி பெற்றுள்ளது. (வி)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



முதலியார்
வை. மகேசனின்
பாரியார்
**இராசமணி**
தோற்றம்: 2-2-1909
மறைவு: 19-6-1979
என்றும் மறவாத
அன்புக் கணவன்,
மக்கள், சகோதரர்,
மருமக்கள், பேரர்,
உறவினர், நண்பர்,
நவாலி,
19-6-84. 325

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரத் தடையினால் பொதுமக்கள் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் பெரும்பாலான பகுதிகளில் கடந்த இரு நாட்களாக தொடர்ச்சியாக மின்சாரம் தடைப்பட்டதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். வீதிகளிலும் வீடுகளிலும், வெளிச்சமின்றி கஷ்டப்பட்டனர்.

மின் தடையினால் நேற்று முன்தினம் முழுவதும், நேற்றுக் காலையும் குழாய்நீர் நகரம் முழுவதும் விநியோகிக்கப்படவில்லை. மின் தடையினால் திருநெல்வேலியிலுள்ள குழாய் நீர்க்கிணறு மோட்டார் இயங்காத காரணத்தினால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

சில அத்தியாவசிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட விருப்பதால் இம்மாதம் 17ம் திகதி காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை யாழ். மாநகரசபை எல்லைக்குள் மின்சாரம் தடைப்படும் என முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் நகரத்தில் பெரும்பாலான பகுதியில், அன்று இரவும் நேற்றும் தொடர்ந்து மின்சாரத் தடை இருந்தது-

இதுபற்றி சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிடம் கேட்டபோது, ஒரு தொடர்புமட்டும் வேலைசெய்வதால் ஆஸ்பத்திரியை சுற்றிய பகுதிக்கு மட்டுமே மின்சாரம் கிடைப்பதாகவும் தொடர்ந்து திருத்த வேலை நடைபெற்றுவருவதாகவும் தெரிவித்தார். (க)

## லக்ஷார்ச்சனை

(யாழ்பாணம்)

வண்ணை அருள்மிகு ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் லக்ஷார்ச்சனைத் தொடரில் இன்று ஆறுவது நாளாக காலை விசேஷ அபிஷேகமும், ஷண்முகார்ச்சனையும் மாலை 3-30 மணி முதல் சந்தனக் காப்புச் சாத்தப் பெற்ற செந்தூர்வேலவனுக்கு நியாச பூர்வ ஷண்முகார்ச்சனையும் 4-30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் பெருமான் வள்ளி தேவசேனா சமேதராக உள் வீதி வலம் வருதலும் நடைபெறும்.

## கட்டாக்காலிகள் தொல்லை

[ஒட்டுசுட்டான்]

முத்துஐயன்கட்டு இடது கரை விவசாயிகளின் நலன் கருதி; கால்நடைகளை மேய்ப்பான் வைத்து பரிபாலிக்கும்படி வேண்டப்பட்டுள்ளது. பெரியநீர்ப்பாசன திட்டத்தின் கீழ்சிறுபோக நெற்செய்கையை கட்டாக்காலி மாடுகளின் தொல்லையால் பெரும் சேதம் ஏற்படாமல் தடைசெய்யுமுகமாக; கால்நடை வளர்ப்போர் பிணைத்து ஆள்வைத்து மேய்க்க வேண்டும் என்றும் அவ்வாறு தவறும் கட்டாக்காலி மாடுகளை பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களால் நியமிக்கப்பட்ட திரு. அ. பலில் பிடித்து பயிர் நட்டமும் பராமரிப்புப்பணமும் பெற்றுக்கொடுப்பதுடன் தண்டனைப்பணமும் வசூலிக்க அனுமதிபெற்று சகல ஒழுங்கு நடவடிக்கையையும் பொறுப்பேற்றுஉள்ளார். இதுசம்பந்தமாக மேலதிக அரசாங்க அதிபர் கால்நடைவளர்ப்போருக்கு அறிவித்துள்ளார்.

## விபத்தில் வயோதிபர் பலி: சாரதியை கைதுசெய்யுமாறு உத்தரவு!

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் — சைக்கிள் விபத்தில் 65 வயது வயோதிபர் பலியானது தொடர்பாக மோட்டார் சைக்கிள் உரிமையாளரை கைதுசெய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இணுவிலைச் சேர்ந்த எஸ். சிவசுப்பிரமணியம் என்ற வயோதிபரே பலியானவராகும். யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினர்.

இம்மாதம் 14ம் திகதி மாலை சண்முகம் செல்லையாவுடன், இறந்தவர் 3ம் கட்டையடியில் நின்று கதைத்துவிட்டு சென்றபோது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதால் இவ்விபத்து ஏற்பட்டது.

பிரேதபரிசோதனை நடைபெற்றபின்னர் சந்தேகநபரான மோட்டார் சைக்கிள் உரிமையாளரை கைதுசெய்யுமாறு உத்தரவிட்ட மரண விசாரணை அதிகாரி விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார். (க)

## சோமஸ்கந்த இல்லப்போட்டி

(புத்தூர்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின்வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பி.ப ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு எஸ். இராஜ, சண்முகரட்ணம் தலைமையில் நடைபெறுகின்றது. பிரதம விருந்தினராக விஞ்ஞான வட்டாரக் கல்வி அதிகாரிதிரு,பி.எஸ்.சர்மாவும், சிறப்புவிருந்தினராககோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசாவும், இளைப்பாறிய கனிஷ்ட அதிபர் திரு. ந,க. செல்லத்துரையும் கலந்து கொள்கின்றனர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குக்கான பரிசில்களை திருமதி பி.எஸ்.சர்மா வழங்குவார்கள். இப்போட்டியின் அமைப்பாளராக திரு. எஸ். சி. சிதம்பரநாதன் கடமையாற்றுகிறார்.

## பகிஷ்கரிப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பல்கலைக்கழகமாணவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் பின்வருமாறு:

''கைதுசெய்யப்பட்டு நெடு நாட்களாக விசாரணைக்குட்படுத்தப்பட்டிருக்கும் சகோதரமாணவர்கள் உடன் விடுதலைசெய்யப்படுவதுடன் பல்கலைக்கழகமாணவர்களை கைது செய்வதும் துன்புறுத்துவதும் முற்றாகக் கைவிடப்படவேண்டும்.''

''விசாரணைக்காக கைது செய்யப்படும் மாணவர்கள் பற்றி, அவர்களது பெற்றோர்களுக்கோ, அன்றி பல்கலைக் கழக நிர்வாகத்துக்கோ உடன் அறியத்தருவதுடன் விசாரணை விரைவாக முடிக்கப்பட்டு மாணவர்கள் துரிதமாக விடுவிக்கப்படவேண்டும்.''

''பல்கலைக்கழக நிர்வாகத்திடம் முன்கூட்டியே அனுமதி பெறாது பாதுகாப்புப்படையினர் பல்கலைக்கழக எல்லைக் குட்புகுதல் கூடாது.

''மட்டக்களப்புப் பல்கலைக் கழகக்கல்லூரி எல்லைக்குள் படையினர் எவரையும் நிலைநிறுத்தவோ உட்புகவோ அனுமதிக்கக்கூடாது.''

இந்த நியாயமான கோரிக்கைகளை பெற்றெடுப்பதற்காகவே வகுப்புகளை பகிஷ்கரிப்பதாக மாணவர்கள் தெரிவித்து இதுசம்பந்தமாக அறிக்கை ஒன்றையும் மாணவர்கள் விடுத்துள்ளனர். (மா)

## மரண அறிவித்தல்

### தியாகராஜா இரத்தினவல்லி

(இராசம்மா)

நல்லூர் புல்லாவின் தோட்டத்தைச் சேர்ந்த தியாகராஜா இரத்தினவல்லி (இராசம்மா) காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற தியாகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற விஜயசூரியர், ராஜசூரியர் (கொழும்பு கிழக்கு கட்டடத்திணைக்கள மாவட்டப் பொறியிலாளர்), திருமதி ராஜேஸ்வரி குமாரசாமி ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி தைரியலட்சுமி குமாரசாமி, காலஞ்சென்ற திருமதி மங்கையற்கரசி சபாபதி காலஞ்சென்ற P. N. திருநாவுக்கரசு, குமார சூரியர் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று 19ம் திகதி காலை 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக 68/2 ராசாவின் தோட்டம் இல்லத்தில் இருந்து செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 356

## தவறணை ஊழியர்கள் மீண்டும் வேலைநிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்க தவறணை ஊழியர்கள் இன்று மீண்டும் வேலைநிறுத்தத்தில் குதிக்கின்றனர்.

வேலைநிறுத்தம் சம்பந்தமாக மேற்படி கூட்டுறவுச்சங்க ஊழியர் சங்கத்தலைவரும் முன்னாள் யாழ்.மாநகரசபை உறுப்பினருமான திரு. வேலுப்பிள்ளை அப்பையா நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தவறணைஊழியர் ஆ. இராசன் தாக்கப்பட்டது சம்பந்தமாக எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், யாழ். மாநகர தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்க நிர்வாகசபையும் இதுசம்பந்தமாக எந்தவிதமானஆக்கபூர்வமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும், இதன் காரணமாகவேதான்; கைவிடப்பட்ட வேலைநிறுத்தத்தை திரும்பவும் ஆரம்பிப்பது என்று மேற்படி சங்கத்தின் ஊழியர்சங்கம் தீர்மானித்தது என்றும் தெரிவித்துள்ளார்.

## அவசரகாலச்சட்டம் நீடிப்பு

(கொழும்பு)

அவசரகாலச்சட்டம்மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவித்தல் நேற்று வர்த்தகமானி மூலம் வெளியிடப்பட்டது.

## சீதனக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர் முதல்தாரம் விவாகம் செய்தே முதல் பெண் பிள்ளைபிறந்ததாகவும் பின்னர் கணவர் இறந்துபோகவே 2வது தாரமாக இவரை விவாகம் செய்ததாகவும் இவர்களுக்கு 2வது பெண் குழந்தை பிறந்ததாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இறந்தவரின் தந்தை மு. கணபதி (65-வயது), சகோதரர் கே. தியாகராசா, கணவன் எஸ்.பாலுசாமி]40வயது] ஆகியோர் சாட்சியமளித்தனர். பதில் நீதவான் கே. சேனாதிராசா யாழ். ஆஸ்பத்திரியில்வைத்து மரணவிசாரணை நடாத்தினர்.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஆர். சீவரத்தினம் சாட்சிகளை ஆஜர் செய்தார். சட்ட வைத்திய அதிகாரி எஸ். பாலசுப்பிரமணியம் பிரேத பரிசோதனை செய்தார். (மா)

## இஸ்ரேல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சியம் என்று இந்த அதிகாரி தெரிவித்தார்.

வெளிநாட்டமைச்சின் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் ''இலங்கையின் வட பகுதியில் பயங்கரவாதிகள் சில நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளபோதிலும் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையேயான பிரச்னை அரசியல் பிரச்னையே. எனவே இப் பிரச்னைக்கு அரசியல் தீர்வே காணப்படும் என்றார்.

## போக்குவரத்து விதிகளை மீறுகின்றனராம்

(சுண்டிக்குளி)

யாழ். நகரில் வாகனங்களை செலுத்துவோர் போக்குவரத்து விதிகளை மீறுவதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் சிலர் தமது மனைவி பிள்ளைகளுடன் குடும்பமாகவும் செல்கின்றனராம் இதுவும் சட்டத்துக்குவிரோதமானது என்று போக்குவரத்து பொலிஸ் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## அரசியல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட அவர் ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் இந்தக் குழுக்கள் இந்தியாவின் தமிழ்நாட்டில் இயங்கிவருவதாகக் குறிப்பிட்டார்.

### வடக்கில் 147 பேர் கொலையுண்டனர்

''1977ம் ஆண்டுக்குப் பின்னர் பொலிசாரும் அரசியல்வாதிகளுமாக 147பேர் வட பகுதி பயங்கரவாத குழுக்களினால் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

''உங்கள்நாடு உலகில் சக்தி மிக்க நாடு. சர்வதேச பயங்கரவாதத்தை முறியடிக்க உழைத்துவரும் நீங்கள் எமது நாட்டின் பயங்கரவாதத்தை முறியடிக்க நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு தர வேண்டும்'' என்று திரு. ஜெயவர்த்தன தனதுபேச்சில் குறிப்பிட்டார்.

வரவேற்பு வைபவம் முடிந்ததும் வெள்ளைமாளிகையில் இரு தலைவர்களும் சந்தித்து பல்வேறு பிரச்னைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தது.

## யாழ். தேர்தல் கந்தோரில் வாக்காளர் இடாப்புக்கள் திருத்தியமைக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேர்தல் கந்தோரில் வாக்காளர் இடாப்புக்களை திருத்தியமைக்கும் வேலைகள் நடைபெற்றுவருகிறது.

வருடாவருடம் நடைபெறும் வாக்காளர் இடாப்புக்களை திருத்தியமைக்கும் வேலை தொடர்பாக கணக்கெடுக்கும் படிவங்களை விநியோகிக்கும் வேலை இம்மாதம் 1ம் தேதி ஆரம்பமானது. இவ்வேலைகள் நாளை 20ம் திகதியுடன் பூர்த்தியாயம்.

யாழ். மாநகரசபை, கிளிநொச்சி [illegible] [illegible] ருடன், விசேட கணக்கெடுப்பாளர்களும் இவ்வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கணக்கெடுக்கும் அலுவலர்களால் திரட்டப்படும் விபரங்கள் வாக்காளர் இடாப்புகளைத் தயாரிப்பதற்காகவேயன்றி வேறு எதற்காகவும் அல்ல என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

கணக்கெடுப்பாளர்கள் வீடுகள் தோறும்சென்று வீட்டில் வசிப்பவர்களின், பெயர், பிறந்த திகதி, தொழில், தேசிய அடையாள அட்டை [illegible] இலக்கம் ஆகியவற்றை பதிவுசெய்துவருகிறார்கள்,

தேர்தல்கள் சம்பந்தமாக தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்க வேண்டுமென முன்மொழியப்பட்டிருப்பதால், ஆள் அடையாள அட்டை வைத்திருக்கும் அனைவரும் அதன் இலக்கத்தை வழங்குவது முக்கியமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டு பிரதான குடியிருப்பாளர்கள் கணக்கெடுக்கும் படிவங்களை நிரப்பி, ஜூன் மாதம் 30ம் தேதிக்குமுன் கணக்கெடுப்பாளர்களுக்கு கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூன் மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49. Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org